# தக்கர் குரல்

உள்ளது உள்ளபடி

TNBIL/25/A2396

| மலர் 1 | இதழ் 3 | டிசம்பர் 2025 | மாத இதழ் | விலை ரூ.25 |
|---|---|---|---|---|
| Volume-1 | Issue 3 | December 2025 | Monthly Magazine | Price RS.25 |






## ஒற்றைத் தேங்காய் லட்சம் ரூபாய்!

## ஆன்லைனில் ரூ.150 கோடி ஸ்வாகா!





## கந்தூரி விழாவில் கலகம்



## S.I.R.-ஐ எதிர்ப்பது ஏன்?

EXCLUSIVE

தக்கார் குரல் | YouTube




SIR-ல் நடக்கும் குளறுபடிகள் என்ன?
தமீம்முன் அன்சாரி EX MLA
தலைவர் மனிதநேய ஜனநாயக கட்சி




ஹோமியோபதி மருத்துவ பயன் என்ன?
பேராசிரியர் டாக்டர் கணேஷ் லட்சுமணன்




நாகூர் தர்காவில் ஊழலா?
மனம் திறந்த நாகூர் கலிஃபா மஸ்தான்!!




சிறுபான்மையினரை ஒடுக்குவது பிஜேபி மட்டும் தானா?
ஜெய்னுலாப்தீன் தலைமை நிலைய செயலாளர்
மனிதநேய மக்கள் கட்சி




வணிக நல வாரியத்தின் வணிகர்கள் பயன் அடைந்தார்களா?
VP.மணி வணிக நல வாரிய உறுப்பினர்




100 கோடி டிரேடிங் மோசடி ஏமாறாமல் இருப்பது எப்படி?
மோஹின் கான் இளம் வர்த்தக நிபுணர்




மின்னனு பொருட்கள் விலை உச்சம் தொட காரணம் என்ன?
ரிச் ஸ்ட்ரீட் குமார் மின்னனு வியாபாரி




சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணியில் மக்களின் நிலை என்ன?
யூசுப் பாஷா தக்கார் குரல் ஆசிரியர்

@PHONE APP

@WEBSITE

@YOUTUBE

@INSTAGRAM

# தயாராகிறது தமிழகம்!

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தயாராகத் தொடங்கிவிட்டது தமிழ்நாடு. தேர்தல் ஆணையம் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிகள் (SIR) வேகமெடுக்கத் தொடங்கிவிட்டன. இதனால், வாக்காளர்கள் மத்தியிலும் தேர்தல் ஜுரம் தொற்றிக் கொண்டுள்ளது.

இதற்கிடையில் அரசியல் கட்சிகள் அனைத்தும் அடுத்த கட்டத்துக்கு நகரத் தொடங்கிவிட்டன. கூட்டணி அமைப்பதிலும், கூட்டணியை உறுதி செய்து கொள்வதிலும் மும்முரம் காட்டுகின்றன.

எதிர்பார்த்தது போலவே பிகார் தேர்தல் முடிவு தமிழக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இண்டியா கூட்டணியின் மிக மோசமான தோல்வியாலும், காங்கிரஸின் வரலாறு காணாத சரிவாலும் அக்கட்சி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. இதனால், திமுகவுடன் பேரம் பேசும் வலிமையை காங்கிரஸ் இழந்துள்ளது.

விஜய் எனும் மற்றொரு துருப்புச் சீட்டை வைத்து திமுகவை மிரட்டும் தொனியில் பேசி வந்த காங்கிரஸார் பிகார் தேர்தல் முடிவுக்கு பிறகு நிசப்தமாகிவிட்டனர். எனினும், திமுக அலட்சியம் காட்டவில்லை. காங்கிரஸ் தலைமையை தொடர்பு கொண்டு பிரச்சினைக்கு தற்காலிக தீர்வை கண்டிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக கூட்டணிக் கட்சிகளுடன் பேசுவதற்கு கிரிஷ் சோதங்கர் தலைமையில் குழு ஒன்றை அமைத்திருக்கிறது காங்கிரஸ்.

மற்றொருபுறம் அதிமுக – பாஜக கூட்டணி சலனமற்று காணப்படுகிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சேர்ந்த பிறகு இதுவரை அக்கூட்டணிக்குள் வேறு புதிய கட்சி ஏதும் வரவில்லை. சொல்லப்போனால், ஓபிஎஸ்ஸும், தினகரனும் கூட்டணியை விட்டு விலகியுள்ளனர். இது அதிமுக தொண்டர்கள் மத்தியில் மனச்சோர்வை ஏற்படுத்தியுள்ளது.

விஜய் கட்சியுடன் யாரும் இதுவரை கூட்டணி வைக்கவில்லை என்றாலும் கரூர் சம்பவத்துக்கு பிறகு தவெக மீண்டு வந்துள்ளது. விஜயே முதல்வர் வேட்பாளர் என்பதை அக்கட்சி மீண்டும் ஒருமுறை உறுதி செய்துள்ளது. திமுகவுக்கு தாங்களே மாற்று என முழங்குகிறது. இதுபோலத்தான் கடந்த லோக்சபா தேர்தலில் அப்போதைய பாஜக தலைவர் அண்ணாமலை முழங்கினார். எனினும், தமிழகத்தில் இருகழகங்களுக்கு இடையேதான் போட்டி என்பதை அந்த தேர்தலில் மக்கள் தெளிவாக கூறி விட்டனர்.

ஆக, இவ்வாண்டின் இறுதியிலோ, தை மாதத்திலோ அனைத்து கூட்டணிகளும் முழு வடிவம் பெற்றுவிடும். அதன் பிறகே தேர்தலின் திசையை கணிக்க முடியும். அதாவது, கட்சிகள் முன்வைக்கப் போகும் கதையாடலைக் (Narrative) கொண்டு தேர்தலின் போக்கை அலச முடியும். அதுவரை கூட்டணி கூட்டல் கழித்தல்கள் விறுவிறுப்பாக நடைபெறும்.

– ஆசிரியர்


தக்கார் குரல்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**G.சதீஸ்குமார், S.சக்தி பாரதி**

சென்னை நிருபர்கள்
தலைமை நிருபர்
**பாலாஜி**

மாவட்ட நிருபர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
சென்னை - **அருள்ஜோதி**
உயர் நீதிமன்றம் **க.முகேஷ்**
மாவட்ட செய்தியாளர்கள்
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
வேலூர் -**ஆர்.கே. சுரேஷ் குமார்**
காஞ்சிபுரம்- **கவீ பாலா**
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
திருவள்ளூர் **சுரேஷ் பாபு**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
காரைக்குடி - **விஜயலட்சுமி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷுவல் எடிட்டர் -**E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**
வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,** மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில் ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com

# விஜயுடன் கைகோர்த்த செங்கோட்டையன்

## யாரால் யாருக்கு லாபம்?




வருகிற 2026ல் சட்டமன்ற தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் தமிழக அரசியல் களம் தினம் தினம் பல அதிரடி மாற்றங்களையும் திருப்புமுனைகளையும் சந்தித்து வருகிறது. யார் யாருடன் கூட்டணி வைக்க போகிறார்கள்? எந்த கட்சியில் யார் இணைய போகிறார்கள்? அடுத்தடுத்த அரசியல் நகர்வுகள் என்னவாக இருக்கும் என்ற கேள்விகளும் அதற்கான பதில் யூகங்களாகவும் உலா வந்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் அரசியல் களத்திற்கு புது வரவாக வந்துள்ள தவெக தான் சந்திக்க உள்ள முதல் தேர்தலில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புகள் எழுந்த நிலையில் கரூர் சம்பவம் அக்கட்சியை சில காலம் அமைதியாக்கிவிட்டது. தொடர்ந்து கரூர் சம்பவத்தை சிபிஐ விசாரிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து தவெகவின் அடுத்தடுத்த நகர்வுகள் தீவிரமெடுக்க ஆரம்பித்தது.

எஸ்ஐஆர்ஐ எதிர்த்து போராட்டம், தவெகவின் சிறப்பு பொதுக்குழு கூட்டம், காஞ்சிபுரம் மக்கள்



**அதிமுக சார்பில்தான் 9 முறை எம்எல்ஏ ஆனார் என்பதால், அவரது தனிப்பட்ட தொகுதி செல்வாக்கு என்பது வரும் தேர்தலில்தான் தெரியவரும். அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் தனித்து களமிறங்கினால் செங்கோட்டையனின் நிலை கவலைக்கிடமாகும். தவெக சார்பில் களமிறங்கினால், குறிப்பிடத்தகுந்த போட்டியை அவரால் தர முடியும். இது செங்கோட்டையனுக்கு கிடைக்கும் வாக்கு லாபம்.**

சந்திப்பு என விஜயின் நகர்வுகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது, கரூருக்கு பிறகு காஞ்சிபுரத்தில் மக்களை சந்தித்த விஜய் பேசியது அரசியல் வட்டாரத்தில் அனல் பறக்க வைத்தது. ஆளும் கட்சியானதிமுகவை விஜய் நேரடியாக சாடினார். திமுகவின் கொள்கையே கொள்ளைத்தானே என்ற விஜய், ஆரம்பிக்கும் முன்னரே அலறினால் எப்படி என்று காட்டமாக விமர்சித்தார். திமுகவை மட்டுமே அவர் சாடியதும், பாஜகவை தொடாமல் விட்டதும் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியது.

இது ஒருபுறமிருக்க அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தவெகவில் இணைய போகிறார் என்று ஒருவாரமாகவே செய்திகள் வந்து கொண்டிருந்தது. அதை ஊர்ஜிதப்படுத்தி தவெகவின் நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆனார் செங்கோட்டையன்.

அதிமுக கட்சி ஒருங்கிணைப்பை வலியுறுத்தி வந்த செங்கோட்டையன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் சபாநாயகர் அப்பாவுவை சந்தித்து தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். அதனை தொடர்ந்து தனது ஆதரவாளர்களுடன் சென்னை பனையூரில் உள்ள தவெகவின் தலைமை அலுவலகத்திற்கு சென்ற செங்கோட்டையன் அக்கட்சியின் தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார்.

'ஏன் தவெகவில் இணைந்தீர்கள்? என நீங்கள் கேட்க கூடும். அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இன்று திமுக வேறு, அதிமுக வேறு இல்லை. இரண்டுமே ஒன்றாக இணைந்துதான் பயணித்து வருகின்றன' என்று பகிரங்கமாக தெரிவித்தார். 2026ல் மக்களால் மாபெரும் புரட்சி உருவாகி, வெற்றி என்ற இலக்கை விஜய் எட்டுவார் என்றும் கூறினார்.

செங்கோட்டையன் செய்தியாளர் சந்திப்பின்போது பல விஷயங்கள் கவனிக்க வேண்டியதாக இருந்தன. அதிமுக வேஷ்டியை தவிர்த்து வந்திருந்த செங்கோட்டையன் தனது சட்டை பாக்கெட்டில் ஜெயலலிதாவின் புகைப்படத்தை வைத்திருந்தார். அதே சமயம் தவெகவின் துண்டை ஆதவ் அர்ஜூனா அணிவிக்க வலியுறுத்தியபோது அதை செய்தியாளர்களின் முன்னிலையில் செங்கோட்டையன் பகிரங்கமாக தவிர்த்தார். இதுதொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது உங்கள் கிண்டல் கேலியை தவிர்க்கவே இவ்வாறு செய்தேன் என அவரது பாணியில் சிரித்துக்கொண்டே பதிலளித்தார்.

செங்கோட்டையனால் விஜய்க்கு லாபமா – விஜயால் செங்கோட்டையனுக்கு லாபமா என்ற கேள்வி எழுகிறது. அதிமுக தொடங்கிய காலத்திலிருந்து எம்ஜிஆருக்கும், குறிப்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கும் நெருக்கமாக



கொங்கு மண்டலம் முழுவதும் செல்வாக்கு செலுத்தி வரும் அதிமுகவுக்கு இணையாக களமாடுவது மிகப்பெரிய சவால். அதுவும் கொங்கை வீழ்த்த வேண்டும் என வேலை செய்து வரும் திமுகவின் செந்தில் பாலாஜிக்கு இணையாக அவரால் களமாட முடியாது. ஆனாலும், நாடறிந்த மனிதர், கொங்கு பகுதியின் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் என்கிற முறையில் அவர் தவெகவுக்கு ஓரளவு பலன் தருவார். அதாவது பிம்ப அரசியலில் விஜய்க்கு உதவுவார். இது விஜய்க்கு கிடைக்கும் லாபம்.

இருந்தவர் செங்கோட்டையன். பழுத்த அனுபவசாலி. அவரது அனுபவம் விஜய்க்கு உதவக்கூடும். ஆனால், கோபி தொகுதியைத் தாண்டி அவரது செல்வாக்கு மண்டலம் என்று ஏதும் இல்லை.

இரட்டை இலை சின்னத்தில் நின்று அதிமுக சார்பில்தான் 9 முறை எம்எல்ஏ ஆனார் என்பதால், அவரது தனிப்பட்ட தொகுதி செல்வாக்கு என்பது வரும் தேர்தலில்தான் தெரியவரும். அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் தனித்து களமிறங்கினால் செங்கோட்டையனின் நிலை கவலைக்கிடமாகும். தவெக சார்பில் களமிறங்கினால், குறிப்பிடத்தகுந்த போட்டியை அவரால் தர முடியும். இது செங்கோட்டையனுக்கு கிடைக்கும் வாக்கு லாபம்.

விஜய்க்கு என்ன லாபம் என்று பார்த்தால், கோபி மக்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு வேட்பாளர் தவெகவுக்கு கிடைத்திருக்கிறார் என்பதுதான். ஆனால், செங்கோட்டையனால், கொங்கு மண்டலத்தை கட்டுப்படுத்த முடியுமா என்றால் அது மிகப்பெரிய கேள்விக்குறி. கொங்கு மண்டலம் முழுவதும் செல்வாக்கு செலுத்தி வரும் அதிமுகவுக்கு இணையாக களமாடுவது மிகப்பெரிய சவால். அதுவும் கொங்கை வீழ்த்த வேண்டும் என வேலை செய்து வரும் திமுகவின் செந்தில் பாலாஜிக்கு இணையாக அவரால் களமாட முடியாது.

ஆனாலும், நாடறிந்த மனிதர், கொங்கு பகுதியின் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் என்கிற முறையில் அவர் தவெகவுக்கு ஓரளவு பலன் தருவார். அதாவது பிம்ப அரசியலில் விஜய்க்கு உதவுவார். இது விஜய்க்கு கிடைக்கும் லாபம்.

இதைத் தாண்டி அரசியல் உலகில் உலா வரும் விஷயம்தான் முக்கியம். அதிமுகவை பலவீனப்படுத்த அக்கட்சியில் எடப்பாடி பழனிசாமி மீது அதிருப்தியில் இருக்கும் முக்கிய தலைவர்களை தவெகவுக்கு இழுத்து வருவார் செங்கோட்டையன் என்ற பேச்சு உலா வருகிறது.

இது எந்த அளவுக்கு சாத்தியம்? தெரியவில்லை. ஆனால், இதுதான் செங்கோட்டையன் **VS** எடப்பாடி பழனிசாமி இடையேயான போட்டியின் வெற்றியாளரை தீர்மானிக்கப் போகிறது.

**விஷ்ணு பிரியா**



# லட்சங்களில் ஏலம் போகும் முருகன் கோயில்

# ஒற்றைத் தேங்காய்



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் திருக்கோவில். சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு பழநியில் இருந்து பிடி மண் எடுத்து வந்து கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த திருக்கோவில் ஜமீன்தார்களால் உருவாக்கப்பட்டு தற்போது இந்து அறநிலைத்துறை மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

350 ஆண்டுகளுக்கு முன்பு போடிநாயக்கனூரை ஆண்ட ராஜ கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்த ஜமீன்தார்கள் தலைமுறை தலைமுறையாக போடிநாயக்கனூரில் இருந்து பழநிக்கு காவடி எடுத்துச் செல்வது வழக்கம்.

போடிநாயக்கனூரை ஆண்ட ராசி நாயக்கர் என்ற ஜமீன்தார் மதுரை திருமலை நாயக்கருக்கு ஒப்பாக இப்பகுதியில் போற்றி வணங்கப்படுபவர். நீதி நெறி தவறாமல் வாழ்ந்த இவர் ஒவ்வொரு ஆண்டும் பழநிக்கு காவடி எடுத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

ஒருமுறை பழநிக்கு அவர் காவடி எடுத்துச் செல்லும்போது மலையேறும் நிலையில் அவர் மனம் வருந்தத்தக்க வகையில் தடங்கல் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால், கோயிலுக்கு செல்ல முடியாமல் நேர்த்திக்கடன் செலுத்த முடியாமல் ஊருக்கு திரும்பி வந்துள்ளார்.

இனி பழநிக்கு நாம் திரும்ப வரக்கூடாது என்ற முடிவில் அவர் திரும்பினாலும் முருகன் மீது கொண்ட அபார பக்தி காரணமாக அவர் அங்கிருந்து பிடிமண் கொண்டு வந்து போடிநாயக்கனூரில் முருகனுக்கு என்று தனி கோவில் அமைத்தார். பழநியில் இருக்கும் முருகனைப்போலவே அளவு ஒத்ததாக கருதப்படும் இந்த விக்ரகம் சுப்பிரமணியர் கோலத்தில் வள்ளி தெய்வானை சமேதராராக அமைக்கப்பட்டது. முழுக்க முழுக்க கருங்கற்கலால் கட்டப்பட்ட இந்த கோவில் தற்போது இந்து அறநிலையத் துறை மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த கோவிலில் முருகனுக்குரிய அனைத்து விசேஷமும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. குறிப்பாக திருச்செந்தூரில் நடைபெறும் கந்த சஷ்டி சூரசம்ஹாரம் பழநியில் சிறப்பாக நடைபெறும் தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் திருவிழாக்கள் மற்றும் இதர முருகனுக்கு உரிய



அனைத்து விசேஷங்களும் இங்கு வெகு விமர்சையாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மேலும், ஐதீக முறைப்படி முருகன் கருவறைக்கு அருகிலேயே விநாயகர் கருவறை மற்றும் சொக்கநாதருக்கு தனி சன்னதி மீனாட்சியம்மாளுக்கு தனி சன்னதி நடராஜருக்கு தனி சன்னதி ஸ்ரீதேவி பூதேவி சமயபுர ஸ்ரீனிவாச பெருமாள், ஆஞ்சநேயர், காசி விஸ்வநாதர், காசி விசாலாட்சி, சரஸ்வதி, தட்சிணாமூர்த்தி, துர்க்கை, சண்டிகேஸ்வரர், காலபைரவர், சனீஸ்வரர் மற்றும் நவக்கிரகங்களுக்கு தனித்தனி பிரகாரங்கள் அமைந்துள்ளது. இதனால், இந்து மத விசேஷங்கள் அனைத்துக்கும், கிரகப் பெயர்ச்சி காலங்களிலும் விசேஷ பூஜைகள் நடைபெறும்.

திருச்செந்தூரில் கடற்கரையோரம் நிகழும் உலகப் பிரசித்தி பெற்ற சூரசம்ஹார நிகழ்வு இங்கு போடிநாயக்கனூரில் நகரின் முக்கிய பகுதிகளில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு ஊர்வலமாக நான்கு முக்கிய வீதிகளில் வெகு சிறப்பாக கொண்டப்படுகிறது. கந்த சஷ்டி கொடியேற்ற நாளில் இங்கு கொடி மரத்தில் சேவல் கொடி ஏற்றப்பட்டு பூஜை செய்வது குறிப்பிடத்தக்கது. அதிலும் மிகக் குறிப்பிடத்தக்க ஒன்று வேறு எந்த கோவிலிலும் காண முடியாத ஒன்றாகும்.

பக்தர்கள் தங்கள் திருமண தடைகள் நீங்கவும் நோய் நொடிகள் விலகவும் தொழில் அபிவிருத்தி, குடும்ப அபிவிருத்திக்காகவும் சேலை உள்ளிட்ட புதுத் துணிகளை கோயிலில் சமர்ப்பிப்பர். அந்த புத்தாடைகள் கோயிலின் முன்பு உள்ள கொடிமரத்தில் மொத்தமாக கட்டப்பட்டு சூரசம்ஹாரம் முடிந்ததற்கு பின்பு கொடி இறக்கப்படும் நாளில் புத்தாடைகளும் இறக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பக்தர்களுக்கே திருப்பித் தரப்படுவது வழக்கமாகும். சுமார் நூறாண்டுகளுக்கு மேலாக நடைபெறும் இந்த சிறப்பு நிகழ்வு வேறு எந்த கோவிலிலும் இல்லாதது குறிப்பிடத்தக்கது. அதேபோல சூரசம்ஹார நிகழ்விற்கு மறுநாள் திருக்கல்யாணம் இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் திருக்கல்யாணத்திற்காக திருமாங்கல்யம் வைக்கப்பட்டும் கும்பக் கலச தேங்காய் பல லட்சங்களுக்கு ஏலம் கேட்கப்படுவது வெகு சிறப்பான ஒன்றாகும். இதுவேறு எங்கும் இல்லாத ஒன்றாகும்.

கடந்த அக்.21ம் தேதி செவ்வாய்க்கிழமை கந்த சஷ்டி கொடியேற்றம் நடைபெற்ற நிலையில் நேற்று 27.10.25 திங்கட்கிழமை கந்தசஷ்டி முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை காலை சுமார் 6 மணி அளவில் கணபதி ஹோமம் தொடங்கப்பட்டு திருக்கல்யாண வைபோகம் நடைபெற்றது. அப்போது திருமாங்கல்யம் வைக்கப்பட்ட கும்ப கலச தேங்காய் ஏலம், ரூ.6 ஆயிரத்தில் இருந்து தொடங்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறும் இந்த நிகழ்வில், கடந்த ஆண்டு ரூ.3.03 லட்சத்துக்கு தேங்காய் ஏலம் எடுக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்ட ஒற்றைத் தேங்காய், 15 ஆயிரம், 20 ஆயிரம், 50 ஆயிரம், 60 ஆயிரம் என்று ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து தற்போது லட்சங்களில் ஏலம் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பக்தர்களால் ஏலம் எடுக்கப்படும் தேங்காய் மீண்டும் அவர்கள் வேண்டிய பிரார்த்தனை நிறைவேறிய பின்பு ஆண்டுகள் கழித்தும் மீண்டும் கோவிலுக்கு கொண்டுவரப்பட்டு கோவிலில் பக்தர்கள் முன்பே கோவில் சிவாச்சாரியார்களால் உடைத்து காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. உடைக்கப்படும் ஒற்றைத் தேங்காய் அழுகாமல் சிவந்த நிறத்தில் இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

விசேஷ நாட்களில் முருகனுக்கு சுமார் 2.5 கிலோ எடையுள்ள தங்க கவசம் சாற்றப்பட்டு வள்ளி, தெய்வானைக்கு வெள்ளி கவசங்கள் சாற்றப்பட்டு விசேஷ பூஜைகள் நடைபெறுவது சிறப்பு ஆகும். தற்போது இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இந்த கோயில், ஜமீன்தார் வம்சாவழியைச் சேர்ந்த முத்துராஜ பாண்டியர் என்பவரை அறங்காவலராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது 13 ஆண்டுகளுக்குப் பிறகு கோயில் ராஜகோபுரம் உட்பட 18 கருவறை விமானங்களுக்கு கும்பாபிஷேகம் செய்வதற்காக பாலாலயம் நடைபெற்று பணிகள் நடந்து வருகின்றன.

**விஜய்**, போடி

# ரூ.150 கோடிக்கு மேல் ஸ்வாகா!



ஸ்ரீநாத் ரெட்டி



அனிதா

## உறைய வைக்கும் ஆன்லைன் மோசடி

### சர்வதேச சைபர் கிரைம் ஏஜென்டை வளைத்தது போலீஸ்

சென்னை பெருங்குடியில் வசிக்கும் கார்த்திக் என்பவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த மார்ச் மாதம் சமூக வலைதளத்தில் வந்த ஆன்லைன் முதலீட்டு வர்த்தக விளம்பரத்தை பார்த்து அதை தொடர்பு கொண்டு வாட்ஸ் ஆப் குழு ஒன்றில் இணைத்துள்ளார்.

அந்த குழுவில் மோசடி நபர்கள் அனுப்பிய லிங் மூலமாக முதலீட்டு செயலி ஒன்றை பதிவிறக்கம் செய்துள்ளார். அதில் முதலீடு செய்யும் பணத்திற்கு அதிக லாபம் கிடைக்கும் என்று நபர்கள் சொன்ன ஆசை வார்த்தைகளை நம்பி அவர்கள் சொன்னபடி பல்வேறு வங்கி கணக்குகளுக்கு பல்வேறு தேதிகளில் சுமார் ரூ.1.43 கோடி பணம் செலுத்தியுள்ளார்.

அவர் செலுத்திய பணத்திற்கு ஏற்றவாறு அதிக லாபம் வந்தது போலவும், முதலீடு செய்யப்பட்டது போலவும் சைபர் குற்றவாளிகள் அந்த செயலியில் காண்பித்துள்ளனர். அதன்பின் முதலீடு செய்த பணத்தை எடுக்க முற்பட்டபோது அவர்கள் வெவ்வேறு காரணங்களை கூறி மேலும் பணம் கேட்டு வற்புறுத்தவே தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்துள்ளார்.

இதையடுத்து சென்னை மத்திய குற்றப்பிரிவில் கார்த்திக் புகார் அளித்தார். புகாரின்பேரின் வழக்கு பதிவு செய்த சைபர் கிரைம் போலீஸார், தனிப்படை அமைத்து தீவிர விசாரணை மேற்கொண்டதில் சூர்யா ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் உரிமையாளர் சூர்யா ஸ்ரீனிவாஸ் என்பவரின் வங்கி கணக்குக்கு பணம் சென்றது தெரியவந்தது. இதையடுத்து, சூர்யா ஸ்ரீனிவாஸ்(50) என்ற தொழிலதிபரிடம் விசாரணை நடத்தியதில் சைபர் கிரைம் மோசடியில் அவருக்கு தொடர்பிருப்பது உறுதி செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

அவரிடம் விசாரணை மேற்கொண்டபோது, ஈக்காட்டுதாங்கல் பகுதியில் உள்ள தனியார் வங்கி கிளையின் முன்னாள் மேலாளர் சேஷாத்ரி எத்திராஜ் என்பவர் இந்த மோசடிக்கு மூளையாக செயல்பட்டு மோசடி செய்யப்பட்ட பணத்தை பல்வேறு வங்கி கணக்குகளுக்கு பரிவர்த்தனை செய்து மோசடி செய்தது தெரியவந்தது.

இதனையடுத்து, சேஷாத்ரி எத்திராஜ்(43) மற்றும் "Money Mule" களாக செயல்பட்ட அனகாபுத்தூர் பகுதியைச் சேர்ந்த தினேஷ்(29), திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருண்பாண்டியன்(33) ஆகிய நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வங்கி மேலாளர் சேஷாத்திரி எத்திராஜ் என்பவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பல்வேறு தகவல்கள் தெரியவந்தது. வங்கி மேலாளர் சேஷாத்திரி எத்திராஜ் தனது வங்கிக் கணக்கில் வாடிக்கையாளர்கள் வைத்துள்ள வங்கி கணக்குகளில் நீண்ட நாட்களாக செயல்படாமல் இருக்கும் வங்கி கணக்குகளை சைபர் கிரைம் மோசடி கும்பலுக்கு தலா ஒரு கணக்கிற்கு ரூ.5 லட்சம் வரை விற்பனை செய்து வந்துள்ளார் என தெரியவந்தது.

அதேபோல சேஷாத்திரி எத்திராஜ் பணிபுரிந்த தனியார் வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருந்த ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் உரிமையாளர் சூர்யா பல்வேறு வகைகளில் ஹவாலா பணம் பரிமாற்றம் செய்வதை அறிந்த வங்கி மேலாளர் சேஷாத்திரி, சூர்யாவை அணுகி மோசடியில் ஈடுப்படுத்தியுள்ளார். கிடைக்கும் பணத்தில் வங்கி மேலாளர் சேஷாத்ரி, சூர்யாவுக்கு பங்கு கொடுத்து வந்துள்ளார். இதன் மூலம் தனது நிறுவனத்தில் பணிபுரிந்த நபர்களின் விவரங்களை சேஷாத்திரிக்கு கூறி அதே கிளையில் வங்கி கணக்கு ஆரம்பித்து மோசடி வலையில் தனது நிறுவன ஊழியர்களையும் சூர்யா சிக்க வைத்ததும் விசாரணையில் தெரியவந்தது.









குறிப்பாக வங்கி மேலாளர் சேஷாத்திரி எத்திராஜ் நூற்றுக்கும் மேற்பட்ட வங்கி கணக்குகளை ஆந்திராவைச் சேர்ந்த முக்கிய சைபர் கிரைம் குற்றவாளியான ஸ்ரீநாத் ரெட்டி(49) என்பவருக்கு விற்பனை செய்ததும், ஒரு கோடி ரூபாய்க்கு, ரூ.5 லட்சம் என பேசி பணம் பெற்று வந்ததும் தெரியவந்தது. தலைமறைவாக இருந்த ஸ்ரீநாத் ரெட்டியுடன், போனில் சேஷாத்திரி பேசியதை மோப்பம் பிடித்த சைபர் கிரைம் போலீஸார், சென்னை கே.கே நகரில் குடும்பத்துடன் வசித்து வந்த ஸ்ரீநாத் ரெட்டியை கைது செய்தனர்.

மேலும் ஸ்ரீநாத் வளசரவாக்கம் மற்றும் ஆந்திர பகுதியில் போலி நிறுவனங்கள் நடத்தி அதன் மூலம் சைபர் மோசடியில் Money Mule-களை சேர்த்து வந்ததும் அதற்கு உடந்தையாக அவரது அலுவலக ஊழியரான அனிதா(40) செயல்பட்டு வந்ததும் தெரியவந்தது. இதனை எடுத்து சைபர் கிரைம் போலீஸார் அனிதாவையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 கணினிகள், 4 செல்போன்கள், 12 கிஜிவி கார்டுகள், 33 சிம்கார்டுகள், 10 காசோலை புத்தகங்கள், 6 சீல்கள் மற்றும் 1 கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

போலீஸ் விசாரணையில் ஸ்ரீநாத் ரெட்டி சர்வதேச சைபர் கிரைம் கும்பலின் முக்கியமான இந்திய ஏஜெண்டுகளில் ஒருவர் என தெரியவந்துள்ளது. மேலும், இவர் சென்னை மற்றும் ஆந்திராவில் பல்வேறு இடங்களில் போலியான நிறுவனங்களை உருவாக்கி, 150க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகள் ஆரம்பித்தும், விலை கொடுத்து வாங்கியும், சர்வதேச சைபர் குற்றவாளிகளிடம் கொடுத்து சுமார் ரூ.150 கோடிக்கும் மேல் மோசடி செய்து அதன் மூலம் ஸ்ரீநாத் ரெட்டி பல கோடி ரூபாய் கமிஷன் பெற்றுள்ளது தெரியவந்தது.

ஸ்ரீநாத் ரெட்டிக்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, குஜராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகள் தெரியும் என்பதால் இவர் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களிலும் ஏஜென்ட்டுகளை நியமித்து அவர்கள் மூலம் இந்தியா முழுவதும் 100க்கும் மேற்பட்ட நபர்களிடம் நேரடியாக மோசடி செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அனிதா என்பவர் ஸ்ரீநாத் ரெட்டியிடம் தொடர்ந்து 15 ஆண்டுகளாக வேலை செய்து வந்ததும், இவரும் ஒரு போலி நிறுவனத்திற்கு இயக்குநராக இருந்து வருவதும் தெரியவந்தது. குறிப்பாக தனியார் வங்கி மேலாளர் சேஷாத்திரி போல பல்வேறு மாநிலங்களில் பல வங்கி ஊழியர்களுக்கு அதிக அளவில் பணம் கொடுத்து வாடிக்கையாளர்களின் வங்கி கணக்கு விவரங்களை சர்வதேச சைபர் கும்பலுக்கு ஸ்ரீநாத் ரெட்டி விற்பனை செய்து வந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

ஸ்ரீநாத் ரெட்டியால் சர்வதேச சைபர் கிரைம் கும்பலுக்கு விற்பனை செய்யப்பட்ட 150க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகளில் 128 வங்கி கணக்குகள் மீது இந்தியா முழுவதும் 120 வழக்குகள் இருப்பதும் அதில் தமிழகத்தில் 18 வழக்குகள் இருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீநாத் ரெட்டி, அனிதா, சேஷாத்திரி எத்திராஜ் உள்ளிட்ட 6 பேரையும் சைபர் கிரைம் போலீசார் நீதிமன்றத்தில் ஆச்சரியப்படுத்தி சிறையில் அடைத்தனர். இவர்களை, போலீஸ் காவலில் எடுத்து விசாரணை செய்தால் சர்வதேச சைபர் கிரைம் கும்பலை எளிதாக நெருங்க முடியும் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# அடிப்படை வசதிகளின்றி நடந்த கந்தூரி விழா

## நாகூர் தர்காவில் தொடரும் அவலம்



நாகூர் தர்காவுக்கு வரும் மக்களுக்கு கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை, அவற்றை மேம்படுத்துவதில் தர்கா நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை என்ற புகார் குறித்து கடந்த மாத (2025 நவம்பர்) தக்கார் குரல் இதழில் செய்திக் கட்டுரை வெளியானது. நாகூர் தர்காவில் ஊழலா? என்ற தலைப்பில் வெளியான அந்த செய்தி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தர்காவின் கந்தூரி விழாவின்போது பொதுமக்களுக்கும், யாத்ரீகர்களுக்கும் போதுமான வசதிகள் செய்து தரப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து நாகூர் தர்காவின் பரம்பரை ஆதீனம் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஙி.ஜி.நூர்தீன் சாஹிப் கூறியதாவது:

உலகப் பிரசித்து பெற்று விளங்கும் நாகூர் ஆண்டவர் ஹஜ்ரத் செய்யதினா செய்யது அப்துல் காதர் சாகுல் ஹமீது (ரலி) அவர்களின் 469ம் ஆண்டு கந்தூரி விழா கொடியேற்றும் 2111 2025 இரவு நடைபெற்றது. இவ்விழாவிற்கு உலகெங்கிலும் இருந்து ஜாதி, மத, பேதமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்கான மாவட்ட நிர்வாகத்தின் முன்னேற்பாடு போதுமானதாக இல்லை என மக்கள் மத்தியில் புகார் எழுந்துள்ளது. தர்காவை சுற்றியுள்ள தலைமாட்டுத்தெரு, மணராடி தெரு, கிழக்கு வாசல், தர்காக்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கடற்கரை சாலை என முக்கிய வீதிகளில் உள்ள சாலைகள் முறையாக செப்பனிடப்படாமலும், மழைநீர் தேங்கியும் காணப்பட்டன. இதனால், யாத்திரிகர்கள் மிகுந்த சிரமத்திற்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகினர்.

469ம் ஆண்டு நாகூர் தர்கா கந்தூரி கொடியேற்ற நிகழ்ச்சி கடும் மழை மற்றும் மக்கள் வெள்ளம் சூழ நடைபெற்றது. தர்கா உட்புறம் அமைக்கப்பட்ட



மேடைகளில் தர்காவின் அறங்காவலர்களும், சாஹிப்மார்களும் குழுமியிருந்தனர். இந்நிலையில் அறங்காவலர்கள் மத்தியில் நடைபெற்ற சில சச்சரவுகள் முகம் சுளிக்கும் வகையில் அமைந்தது துரதிருஷ்ட வசமானது. அறங்காவலர்ள் மத்தியில் நடந்த குடும்ப சண்டைகள் பக்தர்களுக்கு வேதனையை தந்தது.



## 'தர்கா செலவுக் கணக்கு குறித்து வழக்கு தொடர்ந்துள்ளேன்'



**தர்காவில் நடைபெறும் சர்ச்சைகள் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறுபான்மை பிரிவு மாநில தலைவர் தமிம் அன்சாரி தக்கார் குரல் யூட்யூப் சேனலுக்கு அளித்த பேட்டியிலிருந்து..:**

கேள்வி: பக்தர்கள் உண்டியில் செலுத்தும் காணிக்கைகளை வைத்து என்ன செய்கின்றீர்கள்?

பதில்: நாகூர் தர்காவுக்கு வரும் பக்தர்கள் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டுதான் நிர்வாகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அந்தப் பணத்தை முன்கூட்டியே உண்டியல் ஏலம் என்ற பெயரில் தர்கா நிர்வாகம் வாங்கிவிடும். அதிலிருந்து செலவு செய்யக்கூடிய கணக்குகளை கேட்டால் முறையான பதில் தருவதில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டும்.

கேள்வி: ஏலம் விட்டு முன்கூட்டியே பெறக்கூடிய பணத்தில் கூட கழிவறை கட்ட முடியாதா?

நாகூர் தர்காவிற்கு இஸ்லாமியர்களை விட மற்ற மதத்தினர் அதிகமாக வருவது வழக்கம். ஆண்களுக்கு முறையான கழிப்பறை இல்லை என்பது உண்மைதான். நான் ஒப்புக் கொள்கின்றேன். நான் வார்டு கவுன்சிலராக இருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் டி ராஜா அவர்களிடம் எடுத்துக் கூறி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கக்கூடிய நிலையிலிருந்து 2007 ஆம் ஆண்டு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து பெண்களுக்காக கழிப்பறை

## 'முதல்வரை சந்தித்து முறையிட உள்ளேன்'



**நாகூர் தர்கா கலீஃபா மஸ்தான், தக்கார் குரல் யூட்யூப் சேனலுக்கு அளித்திருந்த பேட்டியில் கூறியதாவது:**

**கேள்வி: தக்கார் குரல் இதழில் 'நாகூர் தர்காவில் ஊழலா?' என்ற தலைப்பில் செய்தி வெளியானது. அதுகுறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: நானும் இதில் பதில் சொல்ல வேண்டிய நிலையில் உள்ளேன். உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவினுடைய புகழுக்கு களங்கம் வந்து விடக்கூடாது என்பதற்காக இத்தனை நாட்கள் நான் அமைதியாக இருந்தேன். 450 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான தர்காவில் இல்லாத சர்ச்சை எழுந்துள்ளது. 4 பேர் கொண்ட ஒரு வாரிசுதாரரின் குடும்பம் உள்ளே நுழைந்த காரணத்தால், இன்று நீங்கள் கேள்வி கேட்கின்றீர்கள், நான் பதில் சொல்லும் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளேன்.

**கேள்வி: அடிப்படை வசதிகள் கூட செய்ய முடியாத அளவிற்கு தர்கா நிர்வாகத்தில் அப்படி என்ன சீர்கேடு நடந்துள்ளது?**

பதில்: தர்காவினுடைய வரவு செலவு கணக்கில் வெளிப்படைத்தன்மை இல்லை. கேட்டால் அதற்கு உரிய பதிலும் தருவதில்லை. ஆடிட்டிங் என்ற பெயரில் அவர்கள் எழுதுவதுதான் கணக்கு. மீறி கேட்டால் அவர்களை விட்டு ஒதுக்கும் பணியில் தெள்ளத் தெளிவாக பணியாற்றுவார்கள். அந்தக் கூட்டத்தில் நீதி கேட்டு தனி நபராக போராடிக்

அறங்காவலர்கள் எஜமானின் கந்தூரியை சிறப்பிக்க தவறிவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் வெளியூரிலிருந்து கொட்டும் மழையில் நாகூர் தர்கா கொடியேற்ற விழாவிற்கு வருகை தந்திருக்க, ஒருபுறம் மக்கள் கூட்டம், மறுபுறம் கொட்டும் மழையில் 5 மினாராக்களின் மேலே கொடியேற்றும் ஊழியர்கள் தொங்கி கொண்டிருக்க, கலிபா சாபு எப்போ பாத்தியா ஓதுவார், எப்போ மினாராவை விட்டு கிழே இறங்குவோம் என்ற நிலையில் நாகூர் தர்கா அறங்காவலர்களின் நடத்தை மக்களை முகம் சுளிக்க வைத்தது. தர்காவுக்கு வந்த புனித

கட்டப்பட்டது. தர்கா நிர்வாகம் இன்று அதை வைத்து பல கோடி ரூபாய் ஈட்டியும், கூடுதல் கழிப்பறைகள் கட்டாதது வேதனைக்குரியது.

கேள்வி: தர்கா விதிமுறைப்படி உண்டியல் பணத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது?

பதில்: தர்கா உண்டியல் மூலம் வரக்கூடிய வருவாயிலிருந்து குடிநீர், கழிவறை உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை செய்தபிறகு, மீதமுள்ள பணத்தில் நாகூர் தர்கா பரம்பரை குடும்பங்களுக்கு பிரித்து தர வேண்டும் என்பது இதுவரை நடைமுறையில் இருக்கின்றது.

கேள்வி: தோராயமாக ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் நாகூர் தர்காவுக்கு வருகிறது?

பதில்: நாங்கள் 2 மாதத்திற்கு ஒருமுறை உண்டியல் ஏலம் விடுவோம். கடந்த மாதம் ஒரு கோடியே 18 லட்சம் ரூபாய்க்கு ஏலம்விட்டது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற வருடத்திற்கு 6 முறை ஏலம் விடப்படும். தோராயமாக 6லிருந்து 7 கோடி ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். இதுமட்டுமின்றி கடை வாடகை, பொதுமக்கள் செருப்பு வைப்பதற்கான கடை ஏலம், மக்களிடம் கழிவறை கட்டணம் வசூலிப்பதற்கான ஏலம் என பல கோடி ரூபாய்க்கு வருவாய் உண்டு. மக்களுக்கு அது பயன் பெற்றதா என்றால் அது கேள்விக்குறிதான். இந்த வருவாய் எப்படி செலவானது கேட்டால் எங்கள் மீது கோபப்படுகின்றார்கள். முறையான பதில் கிடைக்காததால் நீதிமன்றத்தை நாடி உள்ளேன். நீதிமன்றமும் 3 மாதத்திற்குள் தர்கா கணக்கு தணிக்கை அறிக்கையை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளது. இதுதான் எனக்கு கிடைத்த வெற்றி. இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறுபான்மை பிரிவு மாநில தலைவர் தமிம் அன்சாரி தெரிவித்தார்.

கொண்டிருக்கிறேன். வக்ஃப் வாரியத்தை அணுகி ஊழல் நடக்கின்றது என்று முதலில் சொன்னது நான்தான். வக்ஃப் வாரியத்தில் கேள்வி கேட்டால் பூசிமொழுகி தப்பித்து வருகின்றனர். தனிநபராக நீதிமன்றத்தையும் நாடி உள்ளேன். கண்டிப்பாக இதற்கு விரைவில் தீர்வு கிடைக்கும்.

**கேள்வி: நீதிமன்றத்திற்கு செலவு செய்யக்கூடிய பணம் தர்கா உடையதா? தனிநபர் பணமா ?**

பதில்: நான் செலவு செய்வது தனிநபர் பணம். அவர்கள் ராஜா வீட்டு கண்ணுக்குட்டிகள். தர்காவிலிருந்து தர்காவை காப்பாற்றுவது போன்ற போர்வையில் மக்கள் பணத்தை வீணடிக்கிறார்கள். விரைவில் அதற்கு உரிய பதில் கிடைக்கும். இறைவனை நம்புகின்றேன்.

**கேள்வி: தர்கா நிர்வாகத்தில் இருப்பவர்கள், நீங்கள் மற்றும் அனைவரும் உறவினர்கள் தானே. ஏன் பதவிச் சண்டை?**

பதில்: இது பதவி சண்டை அல்ல. தர்காவினுடைய பாரம்பரியத்தை, உலகமெல்லாம் வாழும் அனைத்து சமூக மக்களின் நம்பிக்கையை, சீர்குலைக்கும் 4 பேர் கொண்ட கூட்டத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்பதற்காகத்தான் என் மனம் திறந்து பேசுகின்றேன்.

**கேள்வி: ஏன் முதல்வரை சந்தித்து கோரிக்கை விடுக்கவில்லை? சிறுபான்மை துறை அமைச்சரை ஏன் சந்திக்கவில்லை?**

பதில்: தர்காவினுடைய பாரம்பரியத்தை நடுவீதியில் வைக்க தயாராக இல்லை. எனினும், இனி மனம் திறந்து பேசாவிட்டால், தானாகவே அதுநடந்தேறிவிடும். அதனால், கந்தூரி விழாவை முடித்துக் கொண்டு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களை சந்தித்து கோரிக்கை விடுவேன். இவ்வாறு நாகூர் தர்கா கலீஃபா மஸ்தான் தெரிவித்தார்.

யாத்திரிகர்களின் நலனிலும், பொதுமக்களுக்கான வசதிகள் மீதும் அறங்காவலர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை. அதில் அக்கறையின்மை தெளிவாக தெரிந்தது. அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் மாவட்ட நிர்வாகம் திறம்பட செயலாற்றவில்லை என்பதும் பொதுமக்களின் குற்றச்சாட்டாக உள்ளது. அடிப்படை வசதிகள் இல்லாதது, ஊழல் புகார்கள் உள்ளிட்டவை குறித்து விளக்கம் பெறுவதற்காக நாகூர் தர்கா நிர்வாகத்திடம் பேசுவதற்கு தொடர்ந்து முயற்சித்தபோதும், அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை.

பிரத்யேக பேட்டி

# வாக்காளர் பெயர் தில்லுமுல்லாக நீக்கப்படவும் சேர்க்கப்படவும் கூடாது

## S.I.R. எதிர்ப்புக்கு தமிமுன் அன்சாரி விளக்கம்



**சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தமிழகம், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தம் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் பாஜக, அதிமுகவை தவிர பெரும்பாலான கட்சிகள் இதை எதிர்க்கின்றன. இந்நிலையில், இதுகுறித்து மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான தமிமுன் அன்சாரி தக்கார் குரலுக்கு அளித்த பேட்டி:**

**கேள்வி: S.I.R. எனும் சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தத்தை நீங்கள் எதிர்ப்பதற்கான அடிப்படை காரணம் என்ன?**

பதில்: தேர்தல் ஆணையம் மக்களின் நம்பிக்கை இழந்து வருகிறது. மகாராஷ்டிராவிலும், கர்நாடகாவிலும், ஹரியானாவிலும் கூடுதல் வாக்காளர்களை முறைகேடாக சேர்த்து தேர்தல் முடிவுகளில் பாஜக ஆதரவு சூழலை ஏற்படுத்தியுள்ளனர்.

பீகாரில் 67 லட்சம் வாக்காளர்களை நீக்கி பாஜகவின் வெற்றிக்கு துணை நின்றுள்ளனர். தற்போது தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் ஒரு மாதத்திற்குள் ஷி.மி.ஸி. படிவங்களை நிரப்பி தர வேண்டும் என கேட்டுள்ளார்கள்.

இது ஒரு மாதத்திற்குள் என்பதே ஒரு வகை நெருக்கடியை ஏற்படுத்துவதாகும். மேலும் இதில் உள்ள கேள்விகள் ஒன்றிய அரசு கொண்டுவந்து நிறைவேற்ற முடியாமல் தவிக்கக்கூடிய NRC-யின் நகலாக இருக்கிறது. ஒருவரின் வாக்குரிமையை மட்டுமல்ல, குடியுரிமையையும் சந்தேகத்திற்கு உள்ளாக்கும் சூழ்ச்சியும் உள்ளது.

2002 தேர்தலுக்குப் பிறகு வாக்களித்தவர்களின் வாக்குரிமையை சந்தேகிக்கிறார்கள். அனைத்தையும் மறு உறுதி செய்ய வேண்டும் என்கிறார்கள். அப்படியெனில் 2002 முதல் 2024 வரை தமிழ்நாட்டில் நான்கு சட்டமன்றத் தேர்தல்களிலும், நான்கு நாடாளுமன்ற தேர்தல்களிலும் வாக்களித்தவர்கள் போலியானவர்களா? அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் நிலை என்ன?

வெற்றிப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் போலியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? இதற்கு தேர்தல் ஆணையம் என்ன பதில் வைத்திருக்கிறது?

**கேள்வி: வாக்களர்களை பட்டியலிலிருந்து நீக்கும் திட்டம் உள்ளது என குற்றம்சாட்டுகிறீர்கள். இதற்கு முன்பும் சிறப்பு திருத்தம் பல்வேறு முறை நடந்திருக்கிறதே. அப்போதெல்லாம் நடக்காத தவறுகளா இப்போது நடந்துவிடப் போகிறது?**

பதில்: இதற்கு முன்பாக ஷி.ஸி. மற்றும் **S.S.R.** முறையில் வாக்காளர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதை இப்போதும் செய்யுங்கள் என்கிறோம். ஆனால் ஷி.மி.ஸி என்ற பெயரில் நடைபெறும் நடவடிக்கைகளை எதிர்க்கிறோம். ஏனெனில் இதன் மூலமாக தில்லுமுல்லுகள் நடைபெற்று இருப்பதை பிற மாநிலங்களில் பார்க்கிறோம். அது தமிழ்நாட்டிலும் நடந்து விடக்கூடாது என்ற கவலை உள்ளது.

இதன்மூலம் வட இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வேலைக்கு வந்திருக்கும் வாக்காளர்களை தமிழ்நாட்டு வாக்காளர்களாக மாற்றும் சூழ்ச்சியும் உள்ளதாகவும் கருதுகிறோம்.

**கேள்வி: இதேபோன்ற குறுகிய காலத்தில்தானே பிகாரில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அங்கே வரலாறு காணாத அளவுக்கு வாக்குப் பதிவு நடைபெற்றள்ளதே. மக்கள் அதை ஆதரித்திருக்கிறார்களே?**

பதில்: கல்வியறிவும், அரசியல் விழிப்புணர்வும் இல்லாத பீகார் மாநிலத்தில் குறுகிய கால அவகாசத்தில் இவர்கள் நடத்திய ஷிமிஸி வாக்காளர் திருத்தத்தின் மூலமாகத்தான் 67 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் அநியாயமாக விடுபட்டு இருக்கிறார்கள். அங்கு இம்முறை பத்தாயிரம் ரூபாய் அரசு பணத்தை பெற்றுக் கொண்ட பெண்கள் கூடுதலாக வந்து வாக்களித்ததுதான் அங்கு வாக்கு சதவீதம் உயர காரணமாக இருந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

**கேள்வி: பிகாரில் 67 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள் என்றால், அதற்கான தரவுகளை தேர்தல் ஆணையம் தெளிவாக தந்துள்ளதே.**



**இறந்தவர்கள், இடம்மாறியவர்கள், இருமுறை பதிவு செய்தவர்கள் என தெரிவித்திருக்கிறதே?**

பதில்: உயிரோடு இருப்பவர்களை இறந்தவர்களாக தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கும் மோசடிகளும் அங்கு தான் நடந்துள்ளது. தேர்தல் ஆணையம் இறந்தவர்கள் என யாரையெல்லாம் அறிவித்ததோ அவர்கள் எல்லாம் டெல்லிக்கு வந்து ராகுல் காந்தியோடு தேநீர் அருந்திய சம்பவத்திற்கு இதுவரை தேர்தல் ஆணையம் பதில் அளிக்கவில்லையே.. ஏன்? வேலைக்காக வெளி மாநிலங்களுக்கு சென்றவர்கள் பீகாருக்கு திரும்பி வந்தபோது தங்களுடைய வீடுகளும் முகவரிகளும் அப்படியே இருந்தும், வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் இல்லை என்று கதறியதை நாட்டு மக்கள் பரிதாபத்துடன் பார்க்க நேர்ந்ததே.

**கேள்வி: தேர்தலுக்கு முன்பாக 6 மாத காலம் போதாதா திருத்தப் பணிகளை மேற்கொள்ள?**

பதில்: டிசம்பர் 4 வரை ஒரு மாத காலம் தானே அவகாசம் தந்துள்ளார்கள். ஒருவேளை **S.I.R.** கட்டாயம் என தேர்தல் ஆணையம் கருதி இருந்தால், நாடாளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு கூட இந்த பணியை தொடங்கி இருக்கலாமே? ஏன் கடைசி நேரத்தில் நெருக்கடி கொடுக்கிறார்கள்? இதற்கு என்ன காரணம்?

**கேள்வி: தங்கள் தொகுதியில் ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டிருப்பதாக அதிமுகவினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனரே. இந்த தவறுகளை திருத்துவதுதான சிறப்பு திருத்தம்?**

பதில்: அதிமுக இதில் தடுமாறுகிறது. **S.I.R** விவகாரத்தில் பீகாருக்கு ஒரு நிலைப்பாடு,

தமிழ்நாட்டுக்கு ஒரு நிலைப்பாடு என்று பேசுவது அவர்களது அரசியல் தடுமாற்றத்தை காட்டுகிறது. யாரும் தில்லுமுல்லாக நீக்கப்படவும் கூடாது. சேர்க்கப்படவும் கூடாது என்பதுதான் நமது நிலைப்பாடு.

அதிமுகவினர் யாராவது அப்படி நீக்கப் பட்டால் அவர்கள் ஆதாரத்துடன் அதை தெரியப்படுத்தட்டும். தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கட்டும். அதிமுக வினர் மட்டுமல்ல, பாஜகவினர் மட்டுமல்ல, யாருடைய வாக்குகளும் தில்லுமுல்லாக நீக்கப்படவும் கூடாது, சேர்க்கப்படவும் கூடாது என்பதுதான் எமது நிலைபாடு. இந்த சிக்கல், புகார்கள் தீர்க்கப்பட வேண்டும் என்றால் **S.I.R** தவிர்க்கப்பட்டு பழைய **SSR** முறையில் வாக்காளர்களின் விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும். யாருக்கும் பிரச்சனை இருக்காது.



**கேள்வி: சிறப்பு திருத்தம் மேற்கொள்ளாத நிலையிலேயே ஆயிரக்கணக்கானோரின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது எப்படி? அது சதி இல்லையா?**

பதில்: அப்படி எங்கு? எத்தனை பேர்? நீக்கப்பட்டார்கள் என்ற விவரத்தை ஆதாரங்களுடன் தாருங்கள். நாங்களும் அதை கண்டித்து போராடுகிறோம். இதுபோன்ற விஷயங்களில் மேலோட்டமாக பேசக்கூடாது.

**கேள்வி: நடைமுறைச் சிக்கல்களை களைவதற்கு போதுமான அவகாசத்தை தேர்தல் ஆணையம் தருகிறதே.**

பதில்: 6 கோடியே 30 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களின் விவரங்களை ஒரு மாதத்திற்குள் சேகரிக்க வேண்டும் என நெருக்கடி கொடுப்பதுதான் உரிய அவகாசம் என்கிறீர்களா? இதனால் கடும் பணி நெருக்கடிக்கு ஆளாகி இருக்கும் **BLO** அதிகாரிகளின் நிலைகளை சற்று கேட்டறியுங்கள். அவர்கள் மன உளைச்சலோடும், மாத்திரைகளோடும் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கள்ளக்குறிச்சியில் ஒரு பெண் அதிகாரி இதனால் தற்கொலை செய்து கொண்டது தெரியாதா? மேற்கு வங்கத்திலும் இதுபோன்ற கொடுமைகள் நடந்திருக்கிறதே. ஒரு மாதம் மட்டுமே அவகாசம் என்றதும் பல நாடுகளிலும், பல மாநிலங்களில் இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வருகிறார்கள். பலர் விடுமுறை கிடைக்காமல் தவிப்பது உங்களுக்கு தெரியாதா?

**கேள்வி: குறைந்தபட்ச ஆவணங்களைத்தானே கோருகிறது தேர்தல் ஆணையம். அதில் என்ன தவறு இருக்க முடியும்.**

பதில்: உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியும் ஆதார் அட்டையை ஏற்றுக் கொள்ள மறுப்பது ஏன்? ஆதார் தான் எல்லாம் என நீங்கள்தான் கூறினீர்கள். அதில்தான் எல்லா விவரங்களும் இருக்கிறதே. அதையும் கடந்து பாட்டன், பூட்டனின் பயோடேட்டாவை கேட்டு தொல்லைபடுத்துவது ஏன்? கல்வியறிவு இல்லாதவர்கள், கிராமப்புற மக்கள், கூலித் தொழிலாளர்கள், நாடோடி சமூகத்தினர் என வாழும் நம் நாட்டில் அவர்களையெல்லாம் துன்பப்படுத்துவது சரியா? நியாயமா?

இதில் இறந்தவர்களின் பட்டியலை கேட்டு அவர்கள் எல்லாம் நீக்குகிறோம் என்று இதை நியாயப்படுத்துகிறார்கள். ஒருவர் இறந்தவுடன் முறையாக தாசில்தார் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகிறது. அதிலிருந்து அந்த தகவலை நீங்கள் நேரடியாக எடுத்துக் கொள்ளலாமே. டிஜிட்டல் இந்தியா என பேசிக் கொண்டு, ஊர் ஊராக நோட்டும், பேனாவுமாக அதிகாரிகளை ஏன் அலைக்கழிக்கிறீர்கள்?

**கேள்வி: அண்டை நாடுகளிலிருந்து வரும் ஊடுருவல்காரர்களை தடுப்பதற்காகத்தான் இத்திட்டம் என்று சொல்லப்படுகிறதே?**

பதில்: அப்படி என்றால் அத்வானியை சொல்கிறார்களா? அவர்தான் நாடு பிரிவினையின்போது பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு குடிவந்தவர். அவரை எந்த பட்டியலில் தேர்தல் ஆணையம் வைக்கப்போகிறது? ஒரு வாதத்திற்காக இதை ஏற்றுக் கொண்டால் கூட, அண்டை நாடுகளுடன் எல்லைப்புறங்களில் இருக்கும் மாநிலங்களுக்கு இதை கூறி நியாயப்படுத்தலாம். அண்டை நாடுகளின் எல்லையில் ஒட்டி இல்லாத தமிழ்நாட்டிற்கும், கேரளாவிற்கும் இது எதற்கு என்று கேட்கிறோம்.

இவ்வாறு தமிமுன் அன்சாரி தெரிவித்தார்.

# மேடையிலேயே அதிகாரியை விமர்சித்த எம்எல்ஏ




நிகழ்ச்சியில் பங்கேற்ற கதிர்ஆனந்த் எம்.பி.



அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார்

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 72 ஆவது கூட்டுறவு வார விழா நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பேசிய அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் வழங்கிய தவறான தகவலை மேடையிலேயே சுட்டிக்காட்டி கடுமையாக விமர்சித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அப்படி அவர் என்னதான் பேசினார் என்பதைப் பார்ப்போம். 'மாவட்ட ஆட்சியர் அவர்கள் எனது பேச்சை குறித்துக்கொள்ள வேண்டும். நான் நிகழ்ச்சிக்கு சற்று தாமதமாக வந்தேன். அப்போது உள்ளே நுழையும் போது இணைப்பதிவாளர் அய்யப்பன் துரை மேடையில் பேசிகொண்டிருந்தார். அப்போது அவர் தவறான தகவலை தெரிவித்தார். அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலை கிராமத்தில் அமைக்கப்படவுள்ள கூட்டுறவு சங்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இந்த விழாவில் நடைபெறும் என்று சொன்னார்.

ஆனால் அந்த கிராமத்தில் இதற்கான இடத் தேர்வு கூட இன்னும் செய்யப்படவில்லை. இடமே தேர்வு செய்யாமல் எப்படித் அடிக்கல் நாட்ட முடியும்? பல வருட போராட்டத்திற்குப் பிறகுதான் அந்த பகுதியில் கூட்டுறவு கடைக்கு ஒப்புதல் கிடைத்தது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து இந்த கடையை வேலூருக்கு மாற்றி நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், இடம் கூட உறுதி செய்யாத நிலையில் அடிக்கல் நாட்டு விழா நடத்துவதாக அறிவிப்பது முறையல்ல' என்று அவர் குற்றம்சாட்டினார்.

மேலும், 'கடந்த 10 ஆண்டுகளாக ஒரே அதிகாரி வேலூர் மாவட்டத்திலேயே பணியாற்றுகிறார். பெயரளவுக்கு ஒரு மூன்று மாதம் வெளியில் சென்று வருகிறார். யாருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று அவருக்கு தெரியாதா? பீஞ்சமந்தை மலைப்பகுதியில் 66 கிராமங்கள், 20,000 மக்கள் வசித்து வருகின்றனர்.

இத்தகைய பெரும் மக்களுக்கு கூட்டுறவு சங்கம் அவசியம் என்பதையும், உடனடியாக இடத்தைத் தேர்வு செய்து கட்டிடம் கட்டும் பணியைத் தொடங்கி, கூட்டுறவு சங்கத்தை விரைவாகத் திறக்க வேண்டும்' என்றும் அவர் பேசினார்.

சட்டமன்ற உறுப்பினர் அதிகாரியை நேரடியாக மேடையிலேயே குற்றம் சாட்டியதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. எம்எல்ஏ நந்தகுமாரின் பேச்சை ஆமோதிக்கும் விதமாக அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் அவர்களும் அதிகாரி அய்யப்பன் துரையை விலாசி பேசினார்.

# ‘பரவனாற்றில் அருவா மூக்கு திட்டம்’

## விரைந்து முடிக்கக்கோரும் கடலூர் விவசாயிகள்

கடலோர மாவட்டமான கடலூர் இயற்கை சீற்றங்களால் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருகிறது. 2004ல் சுனாமி, 2011ல் ‘தானே’ புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டது. சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை. உள்ளிட்ட 15 மாவட்டங்களின் வடிகாலாக கடலூர் மாவட்டம் உள்ளது. இதனால், ஒவ்வொரு மழைக்காலங்களிலும் கடலூர் மாவட்டம் கடும் பாதிப்பை சந்தித்து வருகிறது.

அந்த வகையில், மழை வெள்ள காலங்களில் கடலுூர் அருகே குறிஞ்சிப்பாடி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ஓடும் பரவனாற்றில் மழைநீரும், நெய்வேலி சுரங்க நீரும் கலந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இதனால், பரவலாறு வழித்தடத்தில் இருக்கும் 24 கிராம ஊராட்சிகளில் 15 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் ஆண்டுதோறும் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன.

இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து அரசுக்கு கோரிக்க வைத்து வந்தனர். ஆனால், கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் அருவா மூக்குத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியகூறுகள் குறைவாக இருந்தது. இப்பகுதியில் இயற்கையாக உள்ள மணல்மேடு அழியும் என்றும், சுனாமி காலத்தில் கடலுக்கு அரணாக, மணல் மேடுகள் உள்ளதாக கூறி, திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

திமுக ஆட்சிக்கு வந்ததும், கடலூர் மாவட்ட செயலாளரும் வேளாண் அமைச்சருமான பன்னீர்செல்வம் முயற்சியால் இத்திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, மதிப்பீடு தயாரானது. அதையடுத்து, மழைக் காலங்களில் பரவனாற்று வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பை தடுக்க, தமிழக அரசு பல கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அதையடுத்து, அருவா மூக்கு திட்டத்தை செயல்படுத்த பணிகள் தொடங்கப்பட்டது.

தற்போது பணிகள் தீவிரமடைந்து, இரவு பகலாக நடந்து வருகிறது. அடுத்த ஆண்டிற்குள் இப்பணிகள் முடிவடையும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தால் ஆண்டாண்டு காலமாக பரவனாற்று வழித்தடங்களில் வெள்ளத்தால் விவசாய நிலங்கள் மற்றும் கிராம பகுதிகள் பாதிப்புக்கு நிரந்த தீர்வு கிடைக்கும் என்று விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நம்புகின்றனர்.

எனவே திட்டமிட்டபடி குறித்த காலத்துக்குள் இந்த திட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அதற்கான பணிகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



பாரி, கடலூர்

## காவலர் குடியிருப்புக்கு உள்ளேயே

# கொலை

## பட்டப் பகலில் துணிகரம்;பீதியில் மக்கள்

திருச்சி மாவட்டம் பீமா நகர் கீழத்தெரு பகுதியைச் சேர்ந்த தாமரைச்செல்வன் (27) என்பவருக்கு கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்து முடிந்தது. இவர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இவர் நவம்பர் 10ம் தேதி வழக்கம்போல் வேலைக்கு செல்வதற்காக திருச்சி பீமநகர் பழைய தபால் நிலைய சாலையில் பைக்கில் வந்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அந்தப் பகுதியில் 2 பைக்குகளில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் தாமரை செல்வன் வாகனத்தின் மீது மோதினர். இதில் தாமரைச்செல்வன் கீழே விழுந்தார்.

அப்போது அவர்கள் 4 பேரும் பயங்கரமான ஆயுதங்களை வைத்திருப்பதை பார்த்த தாமரைச்செல்வன் உடனடியாக அங்கிருந்து அலறி அடித்து ஓடியுள்ளார். அவர்களிடம் இருந்து தப்பிப்பதற்காக அப்பகுதியில் உள்ள காவலர் குடியிருப்புக்குள் தாமரைச்செல்வன் நுழைந்தார். அங்குள்ள காவலர் செல்வராஜ் என்பவரது வீட்டிற்குள் நுழைந்து ஒளிந்து கொண்டிருந்த தாமரைச்செல்வனை அந்த 4 பேர் கொண்ட கும்பல் விடாமல் துரத்திவந்து சரமாரியாக வெட்டியுள்ளனர். இதில் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே தாமரைச்செல்வன் துடிதுடித்து இறந்துள்ளார்.

அங்கிருந்த காவலர்கள் கொலையாளிகளை மடக்கிப் பிடிக்க நினைத்தபோதும் அவர்கள் கையில் பயங்கர ஆயுதங்கள் இருந்ததால் அனைவரும் சற்று தள்ளியே இருந்துள்ளனர். தகவலறிந்து வந்த போலீஸார் தாமரைச்செல்வன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கொடூரமான கொலை சம்பவம் தொடர்பாக போலீஸார் தீவிர விசாரணை செய்ததில் சதீஷ் மற்றும் அவருடைய நண்பர்கள் இந்த கொடூர செயலை செய்தது தெரியவந்தது. சதீஷுக்கும் தாமரைச்செல்வனுக்கும் ஏற்கெனவே இருந்து வந்த முன்விரோதம் காரணமாக இந்த கொலை சம்பவம் நடந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குற்றவாளிகளை தொடர்ந்து தேடி வந்த போலீஸார், நவம்பர் 11ம் தேதி ஸ்ரீரங்கம் அருகே சதீஷை பிடிக்க முயன்றனர். அந்த நேரத்தில் காவலர்கள் ஜார்ஜ் வில்லியம், மாதவராஜ் ஆகியோரை சதீஷ் அரிவாளால் வெட்டி விட்டு தப்பிக்க முயன்றார். அப்போது அங்கு இருந்த காவல் ஆய்வாளர் திருவானந்தம் சதீசை துப்பாக்கியால் கால் முட்டியில் சுட்டு பிடித்தார்.



கொல்லப்பட்ட **தாமரைச்செல்வன்**

இந்த சம்பவத்தின்போது காயமடைந்த காவலர்கள் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவரை திருச்சி மாநகர காவல் ஆணையர் காமினி நலம் விசாரித்தார். பட்டப் பகலில் காவலர் குடியிருப்பில் இப்படி ஒரு கொடூர கொலை சம்பவம் நடந்திருப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இவ்வழக்கில் போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**புவனேஸ்வரி**, திருச்சி

# சவால்களைத் தாண்டிய நம்பிக்கையின் நடை..

"

**இத்தனை இடர்பாடுகள் இருந்தாலும் சித்தஞ்சி கிராமத்துச் சிறுவர்கள் மனதில் இருக்கும் கல்வி மீதான நம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய கனவும் அவர்களைத் தினமும் பள்ளிக்குச் செல்லத் தூண்டுகிறது. கல்வி மீதான நம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய கனவும் போக்குவரத்து வசதியின்மை, கரடுமுரடான சாலைகள், வயல்வெளிகள் மற்றும் மண் பாதை ஆகிய சவால்களை தினமும் கடந்து செல்ல வைக்கிறது.**

"

கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களுக்கு கல்வி என்பது ஒரு சாதாரண நிகழ்வல்ல; அது வறுமை என்னும் சுழலிலிருந்து தங்களை மீட்டெடுக்கும் ஒரு பெரிய கனவு. நகரத்து மாணவர்களைப் போல எளிதில் பள்ளிக்குச் செல்ல இயலாத கிராமத்துச் சிறுவர்களின் அன்றாட வாழ்க்கையே ஒரு பெரும் போராட்டமாக அமைகிறது. இத்தகைய சவால்கள் இருந்தபோதிலும், கல்வி மீதான கிராமப்புற மாணவர்களுக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் விடாமுயற்சியை பாராட்டாமல் இருக்க முடியாது.

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி தாலுகா, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கரிவேடு மதுரா, சித்தஞ்சி கிராமத்தில் நத்த கொள்ளை சித்தஞ்சி, நடு சித்தஞ்சி, ரோடு சித்தஞ்சி என 3 பகுதிகளாக பிரிந்து சுமார் 1,500 மக்கள்



ராஜீவ், இராணிப்பேட்டை



இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி தாலுகா, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் சித்தஞ்சி கிராமத்தில் வயல், கால்வாய்களை கடந்து பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள்.

வாழ்ந்து வருகின்றனர். சித்தஞ்சியும், கரிவேடு கிராமமும் இணைந்து கரிவேடு பஞ்சாயத்து உள்ளது. இந்த பஞ்சாயத்தில் உள்ள சித்தஞ்சி கிராமத்தின் வழியாக பாலாற்றில் இருந்து பாசன புது கால்வாய் வழியில் தாமல் ஏரிக்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது

கரிவேடு பஞ்சாயத்தில் சித்தஞ்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. அதில் சுமார் 55 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தினசரி சுமார் 35 மாணவர்கள் புது கால்வாய் வழியாகத்தான் பள்ளிக்குச் சென்று வருகின்றனர். மேலும் உயர்நிலைப் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் இவ்வழியாக தான் களத்தூரில் உள்ள ராஜா திருநாவுக்கரசு முதலியார் பள்ளிக்கு செல்ல வேண்டி உள்ளது.

பொதுமக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக கால்வாய் வழியாகத்தான் சென்று வருகின்றனர். மழை காலங்களில் தண்ணீரும் சேரும் இருப்பதால் சிரமத்திற்கு மத்தியில் அபாய நிலையில் இந்த கால்வாயை பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக மழைக்காலங்களில் புது கால்வாயில் நீர்வரத்து அதிகமாக உள்ள நேரத்தில், தனிநபர் விவசாயத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஒற்றை அடி கால்வாயை ஆபத்தான முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

சித்தஞ்சி, கரிவேடு ஆகிய 2 ஊருக்குமான தொலைவு 5 கி.மீட்டருக்கு அதிகம் இருக்கும். பஞ் சாயத்து சார்ந்து எந்த வேலையாக இருந்தாலும் சித்தஞ்சி மக்கள் கரிவேடு செல்ல வேண்டும். பேருந்துகள் இல்லாத இடங்களில், மாணவர்கள் அதிக கட்டணம் கொடுத்து தனியார் ஆட்டோக்கள் அல்லது வாகனங்களில் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது ஏழைக் குடும்பங்களுக்கு பெரும் நிதிச் சுமையாகிறது.

சுமார் 35 ஆண்டு காலமாக நடைபாலம் வேண்டி ஒவ்வொரு கிராம சபை கூட்டத்திலும், பல்வேறு நபர்களால் பஞ்சாயத்து அலுவலகம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இத்தனை இடர்பாடுகள் இருந்தாலும் சித்தஞ்சி கிராமத்துச் சிறுவர்கள் மனதில் இருக்கும் கல்வி மீதான நம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய கனவும் அவர்களைத் தினமும் பள்ளிக்குச் செல்லத் தூண்டுகிறது. கல்வி மீதான நம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய கனவும் போக்குவரத்து வசதியின்மை, கரடுமுரடான சாலைகள், வயல்வெளிகள் மற்றும் மண் பாதை ஆகிய சவால்களை தினமும் கடந்து செல்ல வைக்கிறது.

கிராமப்புறச் சிறுவர்கள் தங்கள் கல்வியைத் தொடர்வதற்காக தினமும் செய்யும் இந்த முயற்சி, அவர்களின் அசாத்தியமான மன உறுதிக்கும், ஒளிமயமான எதிர்காலத்திற்கான கனவுக்கும் ஒரு சான்றாகும். இதையே ஒரு சமூகத்தின் உறுதித்தன்மைக்கான அளவுகோளாக கொள்ள முடியும்.

எல்லாம் சரிதான். ஆனால், ஆட்சியரின் கீழ் இயங்கும் மாவட்ட நிர்வாகம் மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்தவும், போக்குவரத்து சிக்கல்களைத் தீர்க்கவும் தனிக்கவனம் செலுத்த வேண்டும். கிராமப்புற மாணவர்கள் பள்ளிக்குச் செல்லும் வழிகளில் சாலைகள், பாலங்கள், விளக்கு வசதி போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும். கிராமப்புற மாணவர்களின் 'நம்பிக்கையின் நடைக்கு' உறுதுணையாக நிற்பது மாவட்ட நிர்வாகத்தின் கடமைப் பொறுப்பாகும். இதன்மீது அரசு தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# 2 நாட்களில் 3 முறை ஆஜரான எம்.பி.



தமிழகத்தில் 2019ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது வேலூர் தொகுதியில் திமுக வேட்பாளராக துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்த் போட்டியிட்டார். அப்போது துரைமுருகன் வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் கணக்கில் வராத பணம் ரூ.10 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கதிர் ஆனந்துக்கு நெருக்கமான திமுக பிரமுகர் பூஞ்சோலை சீனிவாசன் மற்றும் அவரது உறவினர் தாமோதரன் வீடுகளிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதில், காட்பாடி அடுத்த பள்ளிக்குப்பம் கிராமத்தில் தாமோதரனுக்குச் சொந்தமான சிமென்ட் குடோனில் இருந்து திமுக வேட்பாளர் கதிர் ஆனந்துக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு வழங்க இருந்த ரூ.10.48 கோடி பணத்தை பறிமுதல் செய்தனர்.

மேலும், வாக்குச்சாவடி வாரியாக வாக்காளர்கள் விவரங்கள் அடங்கிய ஆவணங்களுடன் புத்தம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த 200 ரூபாய் நோட்டு கட்டுகள் பெட்டி பெட்டியாக பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக, காட்பாடி காவல் நிலையத்தில் அப்போதைய தேர்தல் கணக்கு அலுவலர் சிலுப்பன் அளித்த புகாரின் பேரில் திமுக வேட்பாளர் கதிர் ஆனந்த், திமுக பிரமுகர் பூஞ்சோலை சீனிவாசன், அவரது உறவினர் தாமோதரன் ஆகியோர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். வாக்காளர்களுக்கு பணம் கொடுக்க முயன்றதாக பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கின் விசாரணை வேலூர் ஜெ.எம் 1 நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணைக்காக வேலூர் தொகுதி எம்.பி.யாக உள்ள கதிர் ஆனந்த் ஆஜரானார். பூஞ்சோலை சீனிவாசன் மற்றும் தாமோதரன் இருவரும் ஆஜராகாததால் இவர்களுடன் மாலை 4:30 மணிக்கு மீண்டும் ஆஜராக வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்து, மாலையில் கதிர் ஆனந்தும், தாமோதரன் என்பவரும் ஆஜரானார்கள். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களில் ஒருவரான பூஞ்சோலை சீனிவாசன் என்பவர் ஆஜராகததால் அவருக்கு நீதிமன்றம் பிடிவாரண்டு பிறப்பித்தத்து. 2 நாட்களில் 3 முறை சிட்டிங் எம்.பி. நீதிமன்றத்துக்கு வந்து சென்றது பரபரப்பை ஏற்படுத்தியது.

# பராமரிப்பின்றி பாழாகும் தகனமேடை



வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுகா மேல் ஆலத்தூர் சாலையில் தாழையாத்தம் பகுதியில் முறையான பராமரிப்பின்றி காணப்படும் எரிவாயு தகன மேடை.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுகா சுண்ணாம்புப்பேட்டை பகுதியில் இறந்தவர்களின் உடலை தகனம் செய்ய தகன எரிவாயு மேடை அமைக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 202122ம் ஆண்டு மேல்ஆலத்தூர் சாலையில் தாழையாத்தம் பகுதியில் உள்ள சுடுகாடு மயானத்தில் புதிதாக ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நவீன தகன எரிவாயு மேடை கட்டப்பட்டது. ஆனால், தற்போது, இந்த எரிவாயு மேடை கட்டிடம் முழுவதும் பராமரிப்பு இன்றி செடி கொடிகள் வளர்ந்து புதர் மண்டிக் காணப்படுகிறது. சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருகிறது. இறந்தவர்கள் உடலை அடக்கம் செய்ய வரும் உறவினர்கள் இதுகுறித்து வேதனை தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக தகன எரிவாயு நிர்வாக வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்களிடம் கேட்டபோது, கடந்த சில மாதங்களாகவே இந்த பகுதி போர்வெல் பழுதானதால் இந்த பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. அதனால், சடலங்களை தகனம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே சடலங்களை வேறு பகுதியில் தகனம் செய்து வருவதாக தெரிவித்தனர்.

முறையான பராமரிப்பு இல்லாததால் ரூ.1.50 கோடி மதிப்பிலான பொது சொத்து வீணாகி வருகிறது. மேலும், இங்கு தகனும் செய்ய வருபவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. ஏனென்றால் காடுபோல் உள்ள இந்த இடத்தில் விஷப்பாம்புகளிந் நடமாட்டம் அதிகம் உள்ளது. எனவே, இந்த பகுதியை சுத்தம் செய்தி, தகனமேடையை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஆர்.ஜே.சுரேஷ்குமார்**

# வெடிகுண்டு கலாசாரத்தால் சீரழியும் கடல் வளம்

ரசாயன கழிவு, ஆலைக்கழிவு, இறால் பண்ணைக் கழிவு, பிளாஸ்டிக் கழிவு உள்ளிட்ட பல்வேறு வகை கழிவுகளால் கடல் வளம் பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறது. தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் வெடி வைத்து மீன் பிடிக்கும் முறையால் மேலும் கடல் வளம் சீரழிவை எதிர்நோக்கியுள்ளது.

கடல் வளம் மற்றும் மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் 61 நாள்கள் கடலில் மீன் பிடிக்க அரசு தடை விதித்துள்ளது. மேலும் கடல் அட்டை, கடல் குதிரை, கடல் பசு, கடல் ஆமை, திமிங்கிலம், டால்பின் உள்ளிட்ட பல்வேறு வகையான கடல் வாழ் உயிரினங்களை பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறி வலையில் சிக்கும் இவ்வகையான உயிரினங்களை மீண்டும் கடலில் விட்டுவிட வேண்டும். மீறினால் தண்டனை மற்றும் அபராதம் உண்டு. இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி உள்ளிட்ட கடல் பகுதியில் வெடிவைத்து மீன் பிடிக்கும் முறை தற்போது வளர்ந்து வருகிறது.

நடுக்கடலில் மிகப் பெரிய மரத்தை நட்டு வைத்து விடுகின்றனர். பவளப்பாறைகளை தேடித் திரியும் மீன் கூட்டம் இந்த மரங்களில் தஞ்சம் அடையும். ஜெலட்டின், டெட்னேட்டர் உள்ளிட்ட வெடி மருந்துகளால் மீன் கூட்டத்தின் மீது வெடிக்க செய்து ஒரே நேரத்தில் டன் கணக்கில் மீன்களை அள்ளுகின்றனர். இவ்வாறு மீன் பிடிப்பதால் மீன் குஞ்சுகளும் இறந்து விடுவதால் மீன் இனம் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசால் தடைசெய்யப்பட்டுள்ள வெடி மருந்துகள் சர்வ சாதாரணமாக மீனவர்கள் கையில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் பாறைகளை உடைக்க வாங்கப்படும் வெடி மருந்துகளை அதிக விலை கொடுத்து மீனவர்கள் வாங்குகின்றனர். இதற்கு தனியாக ஏஜெண்ட் இருப்பதாக கூறப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிழக்கு கடற்கரை சாலை எஸ்.பி.பட்டினம் பகுதியில் ரோட்டில் டெட்டனேட்டர், ஜெலட்டின், வயர் உள்ளிட்டவை சிதறி கிடந்ததை கண்டு போலிஸார் அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து தீவிர விசாரனை செய்ததில் தொண்டி மீனவர்கள் சிலர் வாங்கி சென்ற வெடி பொருள்கள் சாலையில் சிதறி கிடந்தது தெரியவந்தது. இந்த வழக்கு தொடர்பாக சிலரை கைது செய்தனர். ஆனால் இன்றும் வெடி வைத்து மீன் பிடிப்பது தெடர்கிறது.

கடலில் வெடியை வெடிக்க செய்யும்போது கடல் பகுதியில் சுமார் 500 மீட்டர் தூரம் கடுமையான அதிர்வு ஏற்படுமாம். இது கடலில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் என்கிறார்கள் சக மீனவர்கள். மீன்வளத் துறையினர் மற்றும் கடல் பாதுகாப்பு போலீஸார் கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே வெடி வைத்து மீன் பிடிக்கும் முறையை தடுக்க முடியும்.

**கவின்**, ராமநாதபுரம்



ராமநாதபுரம் எஸ்.பி.பட்டினம் பகுதியில் சிதறிக் கிடந்த வெடிபொருட்கள்.

இதுகுறித்து திமுக மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளரும், சமூக ஆர்வலருமான டாக்டர் எஸ்டிஆர். சீனிராஜன் கூறியது: நிலப்பரப்பைபோல் கடல் பகுதியிலும் தற்போது வெடிகுண்டு கலாச்சாரம் தொடங்கியிருப்பது கவலையளிக்கிறது. ஆரம்பத்திலேயே இதை தடுக்க வேண்டும். கடல் வளம், மீன் வளத்திற்கு முற்றிலும் ஆபத்தை ஏற்படுத்தும் இம்முறையை தடுக்க வேண்டும் என்றார்.

# மாடு மேய்ச்சலை தடுப்பதா?

## வனத்துறையினருக்கு நயினார் நாகேந்திரன் எச்சரிக்கை

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கரட்டுப்பட்டி கிராமம். இப்பகுதியில் உள்ள கிராம மக்கள் தங்களது பாரம்பரிய நாட்டு மாடு மேய்த்தல் மற்றும் விவசாயம் ஆகிய தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது மாடுகளை உணவுக்காக மலைப் பகுதிகளில் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வர். ஆனால், 2006ம் ஆண்டு முதல் வனத்துறையினர் கடுமையாக சட்டங்கள் போட்டு வனப்பகுதியில் மாடு மேய்ப்பதற்கு அனுமதி மறுத்தனர்.

இதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நாம் தமிழர் கட்சி சீமான், போடி குரங்கணி மலைப்பகுதியில் கரட்டுப்பட்டி கிராம மக்களுடன் சேர்ந்து வனத்துறையின் எதிர்ப்பையும் மீறி மாடு மேய்க்கும் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தற்போது தேனி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் வந்த பாரதிய ஜனதா கட்சி மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கரட்டுப்பட்டியில் உள்ள கிராம மக்களை சந்தித்து மரத்தடியில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டார். கரட்டுப்பட்டி கிராமத்தைச் சார்ந்த மக்கள் அவருக்கு தங்கள் கிராம பாரம்பரிய முறைப்படி தேவராட்டம் ஆடி வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள முத்தாலம்மன் கோவிலில் வழிபாடு செய்த நயினார் நாகேந்திரன், மலைப்பகுதியில் மாடுகளை மேய்ப்பதில் உள்ள பிரச்சனைகளை கேட்டறிந்தார். அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தெலுங்கில் அவர்களுடன் பேசத் தொடங்கிய நயினார் நாகேந்திரன், நானும் எனது வீட்டில் மாடு வளர்ப்பவன்தான். மாடு மேய்ப்பவர்களை தடுக்கும் வனத்துறையை கண்டிக்கிறேன். அப்படி தடுக்கும் வனத்துறையினர் யாராக இருந்தாலும், அவர்கள் பெயரை உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். அவர்களது குடும்பமே பாதிக்கும் அளவிற்கு நடவடிக்கை மிகவும் கடுமையாக இருக்கும். அவர்கள் தங்கள் வேலையையே இழக்க வேண்டியிருக்கும் என்று கடுமையாக எச்சரித்தார்.



**தேனி மாவட்டம் கரட்டுப்பட்டி கிராம மக்களிடம் மனுக்களைப் பெற்றுக்கொண்ட பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன்.**

மேலும், இன்னும் ஓரிரு மாதங்கள் தான் திமுக ஆட்சி அதற்குப் பின்னர் நமது தோழமைக் கட்சியான அதிமுக ஆட்சிக்கு வந்துவிடும் அதற்குப் பின்பு நீங்கள் நிம்மதியாக வனப் பகுதியில் மாடு மேய்க்கலாம் என்று கூறினார்.

உங்களுக்கு இடையூறு செய்தால் உடனடியாக அதிமுக அல்லது பாஜகவினருக்கு தகவல் தெரிவியுங்கள். நாங்கள் விரைந்து வந்து, வனப்பகுதியில் மாடு மேய்க்க இடையூறு செய்பவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதைச் செய்வோம் என்றார்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள கிராம மக்களை மனுக்களை பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

# அடுத்தடுத்து பாயும் வழக்குகள்
# சிக்கலில் மாதம்பட்டி ரங்கராஜ்

பிரபல சமையல் கலைஞரும், நடிகருமான மாதம்பட்டி ரங்கராஜ் ஏற்கனவே மணம் முடித்திருந்த நிலையில், திரைத் துறையில் பிரபல ஆடை வடிவமைப்பாளராக உள்ள ஜாய் கிரிஸில்டாவை, 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாவது மனைவியாக சென்னையில் உள்ள கோவில் ஒன்றில் திருமணம் செய்து கொண்டார்.

ஜாய் கிரிஸில்டா கருவுற்ற நிலையில் ரங்கராஜ் விலகியதால், அவர் தன்னை ஏமாற்றி, மோசடி செய்துவிட்டதாக கூறி சமூக வலைதளங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார். ஆகஸ்ட் 29ல் சென்னை மாநகர காவல்துறையில் புகார் அளித்தும், தன்னை 10 மணி நேரத்திற்கு மேலாக விசாரித்ததாகவும், ரங்கராஜை விசாரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தார்.


மனைவியை விவாகரத்து செய்து விட்டதாக தன்னிடம் பொய் சொல்லி, ஏமாற்றி தன்னை மணமுடித்து மோசடி செய்துவிட்டதாகவும், இரண்டு முறை கருவுற்றபோதும் கலைக்கும்படி அவர் வலியுறுத்தியதாகவும், மூன்றாவது முறை கருவை கலைக்க மறுத்தபோது தான் துன்புறுத்தப்பட்டதாகவும் விளக்கம் அளித்தார்.


தனக்கு எதிராக புகார் கூறுவதற்கும் மற்றும் அவதூறு கருத்து தெரிவிப்பதற்கும் ஜாய் கிரிஸில்டாவுக்கு தடை விதிக்கக் கோரியும், சமூக வலைதளங்களில் உள்ள வீடியோக்களை நீக்கக்கோரியும் மாதம்பட்டி ரங்கராஜ் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.



ரங்கராஜ் மீதான புகாரில் எந்தவித முன்னேற்றம் இல்லாததால் மாநில மகளிர் ஆணையத்தில் ஜாய் கிரிஸில்டா அளித்த புகார் மீதான விசாரணைக்கு, வழக்கறிஞரும், முதல் மனைவியுமான ஸ்ருதியுடன் மாதம்பட்டி ரங்கராஜ் ஆஜரானார்.

அப்போது, ஜாய் கிரிஸில்டாவை திருமணம் செய்ததாகவும், அவர் சுமக்கும் குழந்தைக்கு தந்தை நான்தான் என்றும் மாதம்பட்டி ரங்கராஜ் ஒப்புக்கொண்டதாக கூறிய ஆணையம், அதன் அடிப்படையில் மாதம்பட்டி ரங்கராஜ் மீது சட்டப்படி





நடவடிக்கை எடுக்க சென்னை காவல் ஆணையர் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையருக்கு பரிந்துரைத்தது. ஆனால், அவ்வாறு தான் ஒப்புக்கொள்ளவில்லை என ரங்கராஜ் மறுத்தார்.

இதற்கிடையே, மாதம்பட்டி தங்கவேலு ஹாஸ்பிட்டாலிட்டியின் இயக்குநர்களில் ஒருவரான ரங்கராஜ் தொடர்பான விவகாரத்தில், ''மாதம்பட்டி பாகசாலா'' நிறுவனத்தை தொடர்புபடுத்தி சமூக வலைதளங்களில் தெரிவித்த கருத்துக்களால் ரூ.12 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதால், ஜாய் கிரிஸில்டா கருத்துகளை பதிவிட தடை விதிக்கக் கோரி மாதம்பட்டி தங்கவேலு ஹாஸ்பிட்டாலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை காவல் ஆணையரகத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில், இவ்வழக்கை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும் என ஜாய் கிரிஸில்டா உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இதில், மோசடி, மிரட்டல், கொடுமைப்படுத்துதல் கருச்சிதைவை ஏற்படுத்துதல், மின்னணு பதிவுகளை அழித்தல் போன்ற பிரிவுகளின் கீழ் புகார் அளித்த நிலையில், மாதம்பட்டி ரங்கராஜ் மீது ஜாமீனில் வெளிவரக்கூடிய பிரிவின் கீழ் மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார்.

தனது குழந்தைக்காகவே போராடிக்கொண்டிருப்பதாக கூறிய ஜாய் கிரிஸில்டா, தனது மருத்துவ செலவு, வீட்டு வாடகை, இதர செலவுகளுக்காக மாதந்தோறும் ஆறரை லட்சம் ரூபாயை பராமரிப்பு செலவாக வழங்க மாதம்பட்டி ரங்கராஜுக்கு உத்தரவிடக் கோரி சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளார்.





ஆனால் மாதம்பட்டி ரங்கராஜ், தான் வைத்திருந்த நம்பிக்கையை தவறாக பயன்படுத்தி ஏமாற்றி விட்டதாகவும், கிரிஸில்டா பேட்டி காரணமாக முதல் மனைவி மூலம் பிறந்த இரு குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

இந்நிலையில், நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வு காண தன்னை அணுகியதாகவும், பிரச்சினையை சட்டப்படி சந்திக்க தயார் என்றும் அறிவித்தார் மாதம்பட்டி ரங்கராஜ். ஆனால், இந்த பொய்யான, அவதூறு குற்றச்சாட்டை கொண்ட அறிக்கைக்கு மன்னிப்பு கேட்பதோடு, அவரை அணுகியவர்கள் யார் என்ற விவரங்களை ரங்கராஜ் வெளியிட வேண்டும் என ஜாய் கிரிஸில்டா எதிர்வினையாற்றியுள்ளார். தனக்கும், தனது குழந்தைக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக மட்டுமே குரலெழுப்பி வருவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த இருவரின் தனிநபர் பிரச்சினை பொதுவெளிக்கு வந்து, தற்போது வெகுஜன ஊடகங்களில் மட்டுமல்லாது சமூக ஊடகங்களிலும் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

**க.முகேஷ்,** சென்னை

# பாலியல் தொழிலில் உழலும் திருநங்கைகளை மீட்பது யார் பொறுப்பு?

மனித சமூகத்தின் மூன்றாவது பாலினமாக வாழ்ந்து வருபவர்கள் திருநங்கைகள். உடலளவில் ஓரினமாகவும், உணர்வளவில் ஓரினமாகவும் வாழ்பவர்கள். உதாரணமாக, ஆணாக பிறந்து உடலில் ஏற்படும் மாற்றத்தால் பெண்மையை உணர்ந்து அறுவை சிகிச்சை செய்து தங்களை முழுவதும் பெண்களாக மாற்றிக் கொள்பவர்களும் உண்டு.

தமிழகத்தில் வாழும் திருநங்கைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார உதவி கிட்டும் வகையில் நலத்திட்டங்களை செயல்படுத்த அரசு சார்பில் தமிழ்நாடு திருநங்கையர் நலவாரியம் செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம் மூலமாக ஓய்வூதியம், கல்வி உதவித் தொகை போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, ஆணாக இருந்து பெண்ணின் தன்மையை தன்னுள் உணரும் இவர்களை பெற்றோர் மற்றும் சமூகம் புறக்கணித்துவிடும். அதனால், இவர்கள், வீட்டை விட்டு வெளியேறி அலைந்து திரிந்து மூத்த திருநங்கைகளிடம் அடைக்கலம் தேடி தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போதைய காலக்கட்டத்தில் பல வீடுகளில் பெற்றோர்கள் இவர்களை ஏற்று கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.

திருநங்கைகளாக இருப்பவர்கள் காவல்துறை, மருத்துவத் துறை, தனியார் நிறுவனங்களில் வேலை, நாட்டியக் கலை, சினிமா நடிகைகள் மற்றும் டீக் கடை என பல்வேறு துறையில் சாதித்து வருகின்றனர்.



**திருநங்கைகளாக இருக்கும் பலர் தங்களுடைய வாழ்க்கை தரத்தை மாற்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வந்தாலும் இந்த பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் எந்த மாற்றமும் இல்லாமல் அதே தொழிலையே செய்து வருகின்றனர்.**







சாதிக்க துடிக்கும் திருநங்கைகளுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இருந்தபோதிலும் தலைநகரான சென்னை மட்டுமல்லாமல் தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் திருநங்கைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுவது மற்றும் டாஸ்மாக் கடை வாசல்களில் நிற்பது போன்ற செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை இந்த நிலைக்கு யாரேனும் தள்ளுகிறார்களா? அல்லது பொருளாதார சூழ்நிலையால் இவர்கள் இதுபோன்ற நிலைக்கு தள்ளப்பட்டார்களா? என்ற கேள்விக்கு காலம் முழுவதும் பதில் கிடைக்காத வகையில்தான் திருநங்கைகள் வாழ்க்கை அமைந்துள்ளது.



திருநங்கைகளின் இந்த நிலைக்கு யார் காரணம் என பார்த்தால் திருநங்கைகளை புறக்கணித்த அவர்களது குடும்பத்தாரும், திருநங்கைகளை சக மனிதர்களாக ஏற்றுக்கொள்ளாத இந்த சமூகமும்தான் காரணமாக உள்ளது.

இது ஒருபுறம் இருந்தாலும் பாலியல் தொழிலில் ஈடுபடும் திருநங்கைகளுக்கு தமிழகத்தில் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையே நிலவி வருகிறது. பாலியல் தொழில் ஈடுபடும் திருநங்கைகளை போதையில் கொலை செய்யும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

திருநங்கைகளாக இருக்கும் பலர் தங்களுடைய வாழ்க்கை தரத்தை மாற்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வந்தாலும் இந்த பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் எந்த மாற்றமும் இல்லாமல் அதே தொழிலையே செய்து வருகின்றனர். திருநங்கைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் முறையாக சம்பந்தப்பட்டவர்களை சென்று சேருகிறதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

திருநங்கைகளில் சிலர் முன்னேற்ற பாதையில் இருந்தாலும் பாலியல் தொழிலில் இருப்பவர்களும் தாங்களாக முன்வந்து அந்த தொழிலில் இருந்து வெளியேறி மாற்று வாழ்க்கையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதும், மாற்று வாழ்க்கையை தேர்ந்தெடுக்கும் அவர்களுக்கு சரியான வழிகாட்டுதலை அரசு செய்து தரவேண்டும். ஆக, பாலியல் தொழிலில் ஈடுபடும் திருநங்கைகளின் வாழ்வில் மாற்றம் ஏற்படுவதற்கான முதல்படியாக இருப்பது மனமாற்றம்தான். அதற்கு ஒத்திசைவான அரசின் உதவியும் அமைந்துவிட்டால் திருநங்கைகள் வாழ்வில் ஒளி பிறப்பது உறுதி.

# தப்பிக்க முயன்ற கஞ்சா வியாபாரி

# சுட்டுப் பிடித்த போலீஸ்





கடலூர் நகரத்துக்கு அருகே ஆல்பேட்டை சோதனை சாவடியில் 5 கிலோ கஞ்சா கடத்தி வரப்பட்டது. அதை போலீஸார் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக சந்துரு, ஸ்ரீதர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிதம்பரம் அண்ணாமலை நகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு இதில் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை அமைத்து விசாரணை நடத்தப்பட்டது. அதில் வல்லம்படுகையைச் சேர்ந்த நவீன் என்ற நபர் கஞ்சாவை வாங்கி சப்ளை செய்வதாக தகவல் கிடைத்தது. சிவபுரி சுடுகாடு அருகே நவீன் மற்றும் அவரது 2 கூட்டாளிகள் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் போலீஸார் அங்கு சென்றனர்.

அங்கு, ஜெயக்குமார் மற்றும் அருள் ஆகியோரை போலீஸார் மடக்கிப் பிடித்தனர். அப்போது, நவீன், கத்தியை காட்டி மிரட்டி அங்கிருந்து தப்பித்தார். அவரைப் பிடிக்க தனிப்படை போலீஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அதன் பலனாக அவரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர்.

அப்போது, அவர் கஞ்சாவை சில இடங்களில் பதுக்கி வைப்பதாக தெரிவித்தார் இதை தொடர்ந்து ஆய்வாளர் அம்பேத்கர் தலைமையிலான தனிப்படை போலீஸார், நவீனை அழைத்துச் சென்று கஞ்சா பதுக்கி வைத்து இருந்த இடத்தில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, நவீன், அங்கு மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காவலர் ஐயப்பனை தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றார். இதையடுத்து, ஆய்வாளர் அம்பேத்கர் நவீனை எச்சரித்து நிற்கச் சொன்னார். எனினும், அங்கிருந்து தப்பிக்க முயற்சித நவீனை, ஆய்வாளர் அம்பேத்கர் துப்பாக்கியால் காலில் சுட்டு பிடித்தார்

காயமடைந்த, நவீன் மற்றும் காவலர் ஐயப்பன் ஆகியோர் சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கடலூர் மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் காயமடைந்த காவலரை சந்தித்து நலம் விசாரித்தார். தற்பொழுது நவீன் மீது 9 வழக்குகள் உள்ளது. சிதம்பரம் அண்ணாமலை நகர் பகுதியில் மட்டும் கடந்த சில மாதத்தில் மட்டும் 31 பேர் இதுவரை கஞ்சா வழக்கில் கைது செய்துபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது .

# கல்லூரி மாணவர்களின் வங்கிக் கணக்கு மூலம்



# ஆன்லைன் மோசடி



சீனியர் எஸ்பி
**நித்யா ராதாகிருஷ்ணன்**

புதுச்சேரி மற்றும் தமிழக பகுதிகளில் கல்லூரி மாணவர்களிடம் வங்கி கணக்கை பெற்று இந்தியா முழுவதும் ரூ.90 கோடிக்கு மேல் ஆன்லைன் மோசடியில் ஈடுபட்ட தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 7 பேரை கைது செய்த புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸார் அவர்களிடமிருந்து சொகுசு கார், 5 லட்சம் பணம் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்கள், செல்போன், லேப்டாப், கிஜிவி கார்டுகள் ஆகியவற்றை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர்.




புதுச்சேரி, தனியார் பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தினேஷ் மற்றும் ஜெயப்பிரதாப் ஆகியோர் தங்களது வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக சைபர் கிரைம் போலீஸாரிடம் புகார் அளித்தனர். இதையடுத்து, போலீஸார் அந்த வங்கி கணக்குகளை ஆராய்ந்தபோது, அவை மேற்கு வங்காளம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் முடக்கப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து, கல்லூரி மாணவர்களிடம் விசாரித்தபோது, அதே கல்லூரியில் படிக்கும் மாணவரான கடலூரைச் சேர்ந்த ஹரிஷ்(21) என்பவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஒரு வங்கி கணக்குக்கு தலா ரூ.2,500 தருவதாக கூறியதாகவும், பணத்துக்கு ஆசைப்பட்டு ஹரிஷிடம் வங்கி கணக்கு தொடங்கியதோடு, சிம் கார்டு வாங்கி கொடுத்ததாக தெரிவித்தனர்.

இதையடுத்து, சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, ஹரிஷை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். ஹரிஷ் 20க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களிடம் இருந்து இதுபோன்ற வங்கி கணக்கை பெற்று, புதுச்சேரி, லாஸ்பேட்டையைச் சேர்ந்த கோவிந்தராஜ்(24) என்பவரிடம் கொடுத்ததாக கூறினார். அதன்பேரில், கோவிந்தராஜை கைது












செய்து விசாரணை நடத்தினர். அதில் சென்னையைச் சேர்ந்த கணேசன்(33) என்பவரிடம் வங்கி கணக்குகளை ஒப்படைத்ததாக தெரிவித்தனர். மேலும், கணேசன் கொடுக்கும் ஏடிஎம் கார்டுகளை பயன்படுத்தி தினமும் ரூ.4 முதல் ரூ.10 லட்சம் வரை பணத்தை எடுத்து கொடுத்து வந்துள்ளனர். இதற்காக கணேசனிடம் இருந்து கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை மாதந்தோறும் ரூ.25 ஆயிரம் ஊதியமாக பெற்றது தெரியவந்தது. தொடர்ந்து கடந்த 8 மாதத்தில் மட்டும் ரூ.8 கோடி வரை சைபர் மோசடி பணத்தை எடுத்து கொடுத்ததாக அதிர்ச்சி தகவல் வெளியானது.

இதையடுத்து, சென்னைக்கு சென்ற சைபர் கிரைம் தனிப்படை போலீஸார் கணேசனை கைது செய்து விசாரணை நடத்தினர். அதில், கணேசன் புதுச்சேரி மற்றும் இந்தியா முழுவதும் 500க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகளை பெற்று, அதன்மூலம் மோசடியாக பெற்ற பணத்தை கிரிப்டோ கரன்சியாக மாற்றி சீனா, அயர்லாந்து, கனடா உள்ளிட்ட பல நாடுகளுக்கு அனுப்பி, அதற்காக கமிஷன் பெற்றதும் தெரியவந்தது.


மேலும், கணேசன் அளித்த தகவலின் பேரில் புதுச்சேரி, அரும்பார்த்தபுரத்தை சேர்ந்த யஷ்வின்(20), கடலூர், நடுவீரப்பட்டை சேர்ந்த அய்யப்பன்(24), சென்னை, அண்ணா நகரைச் சேர்ந்த தாமஸ்(29), கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த ராகுல்(23) ஆகியோரை போலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ரூ.5 லட்சம் ரொக்கம், 276 வங்கிக் கணக்கு புத்தகங்கள், 171 செக்புக், 20 செல்போன், 2 லேப்டாப், சிம் கார்டுகள், 75 ஏடிஎம் கார்டுகள், பணம் எண்ணும் இயந்திரம், போலி நிறுவன முத்திரைகள், கார் மற்றும் பல்வேறு ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், அவர்களின் வங்கி கணக்குகளை சோதனை செய்ததில், இந்தியா முழுவதும் ரூ.90 கோடிக்கு மேல் மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. இவ்வாறு சீனியர் எஸ்.பி. நித்யா ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரும் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர்.

**ஏ.கே.ஆர்.,** புதுச்சேரி

# AI: Isn't Good or Bad - It's Both




Last week, I watched my neighbour's daughter use an AI tool to help with her chemistry homework. Within minutes, she understood a concept that had stumped her for days. That same evening, I read a news article about workers losing their jobs because a company replaced them with AI systems. These two moments, happening so close together, made me think about the question we're all asking: Is artificial intelligence helping us or hurting us?

The truth is, it's doing both. And that's what makes this conversation so important right now.

The Good Side We Can't Ignore

Let's start with the positive, because there's genuinely a lot to be excited about. AI is already making life better in ways that seemed impossible just a few years ago.

Take healthcare, for example. Doctors are now using AI to spot diseases earlier than ever before. There are programs that can look at X-rays and find tiny signs of cancer that even experienced doctors might miss. This doesn't mean robots are replacing doctors. Instead, they're giving doctors a powerful tool that helps them save more lives. A radiologist I spoke with told me that AI helps her work through scans faster, which means patients get their results sooner and she has more time to spend explaining things to worried families.

Then there's the simple stuff that makes daily life easier. When you ask your phone for directions, or when Netflix suggests a show you end up loving, or when your email filters out spam so you don't have to deal with it that's all AI working in the background. Most of us use AI dozens of times a day without even thinking about it.

For people with disabilities, AI has opened doors that were closed before. There are apps that describe the world to blind users, software that translates sign language in real time, and tools that help people with speech difficulties communicate more easily. These aren't just nice features. For many people, they're life-changing.

In education, AI tutors can work with students at their own pace, never getting tired or impatient. A kid who's struggling with math can practice the same problem fifty times with an AI tutor that adjusts its teaching style based on how the student learns best. AI is encouraging students building their confidence and helping them develop critical thinking skills.

The Real Worries We Need to Talk About

But here's where things get complicated. For every story of AI helping someone, there's another story that raises serious concerns.

The biggest worry for most people is jobs. And it's not an unfounded fear. Companies are using AI to do work that humans used to do, and unlike past technological changes, this is happening incredibly fast. Factory workers, truck drivers, customer service representatives, even writers and artists are seeing AI systems that can do parts of their jobs. Some experts say millions of jobs could disappear or dramatically change in the next decade.

I talked to a graphic designer named Marcus who's been in his field for fifteen years. He told me that clients now sometimes ask why they should pay him when they can use an AI image generator for free. "I know I can do things AI can't," he said. "I



understand what a client needs before they even say it. I can think creatively about their brand. But I have to prove that value now in a way I never did before."

Then there's the problem of AI making mistakes and those are sometimes dangerous ones. Self-driving cars have gotten into accidents. AI hiring tools have been caught discriminating against certain groups of people. Medical AI has sometimes been wrong in ways that could harm patients if doctors trusted it blindly. The tricky thing is that AI can seem very confident even when it's completely wrong, and it's not always easy to spot these errors.

Privacy is another huge issue. AI systems learn by looking at enormous amounts of data, and a lot of that data is about us. Our shopping habits, our locations, our faces, our conversations and what not. The AI companies are collecting and using this information, often in ways we don't fully understand. There's something unsettling about knowing that AI systems might know things about you that you didn't explicitly tell them, pieced together from hundreds of small digital clues you've left behind.

And here's something that keeps me up at night: AI can be used to lie in very convincing ways. You've probably seen those "deepfake" videos where someone appears to say things they never said. As this technology gets better, how will we know what's real anymore? During elections, in courtrooms, in our personal relationships, AI's ability to fake reality could cause real damage.

**What This Means for All of Us**

So where does this leave us? Should we be excited or scared?

I think the answer is that we should be both, but more importantly, we should be involved. This isn't something we can just let happen to us. The future of AI depends on choices we make right now as individuals and communities.

We need better rules and regulations, but not the




kind that just slow everything down. We need smart policies that encourage innovation while protecting people. Some countries are already working on this. The European Union, for instance, is creating laws that require AI systems to be transparent about what they're doing and to avoid discrimination. We need more of that kind of thinking.

Companies building AI need to be responsible, not just profitable. They should be asking not just "Can we build this?" but "Should we build this?" and "Who might this hurt?" Some tech companies are starting to hire ethicists and create review boards but there needs to be more accountability. When an AI system causes harm, someone should be responsible for fixing it.

Education needs to change too. We can't prepare kids for the world by teaching them the same way we did twenty years ago. They need to learn how to work alongside AI, how to think critically about what AI tells them, and how to do the kinds of creative and emotional work that AI can't do. We need to teach digital literacy the way we teach reading and math as a fundamental skill everyone needs.

For workers facing job changes, we need real support. That means retraining programs that actually work, safety nets for people in transition, and serious conversations about how we value work in a world where AI can do more and more tasks. Finding the Balance.

**Vijayalakshmi Veeraiyan, Finland**

## தக்கார் GENIUS PUZZLE 9X9

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | 3 |
| | | 8 | | 7 | | 4 | 5 | |
| | 9 | | | | 6 | | | |
| | | | | 3 | | | | 8 |
| | | 1 | | | | | | 2 |
| 6 | | | | | 7 | 1 | 3 | |
| | | 4 | | 5 | | 7 | 1 | |
| 8 | | | 4 | | | | | |
| | | | | | | 2 | | |

Think you're a 9×9 Puzzle master?
Here's a special Puzzle to
CHALLENGE your mind!
PROVE IT! THIS PUZZLE LOOKS
SIMPLE... BUT NOT. 90% OF
PEOPLE GIVE UP HALFWAY! GIVE IT
YOUR BEST – AND REMEMBER,
REAL CHAMPIONS DON'T PEEK AT
THE ANSWER! 😎

### ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 7 | 8 | 2 | 5 | 9 | 6 | 3 |
| 2 | 6 | 8 | 9 | 7 | 3 | 4 | 5 | 1 |
| 5 | 9 | 3 | 1 | 4 | 6 | 8 | 2 | 7 |
| 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 6 | 4 | 8 |
| 3 | 8 | 1 | 6 | 9 | 4 | 5 | 7 | 2 |
| 6 | 4 | 2 | 5 | 8 | 7 | 1 | 3 | 9 |
| 9 | 2 | 4 | 3 | 5 | 8 | 7 | 1 | 6 |
| 8 | 7 | 6 | 4 | 1 | 2 | 3 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 7 | 6 | 9 | 2 | 8 | 4 |







Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai-600002, Editor. S.Esuf Basha